பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com




சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 21 வியாழக்கிழமை (06.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 230

## சட்டத்தை கையில் எடுத்தார் கோத்தா

# கடத்தப்பட்டவர்களில் பலர் கடல் மீனுக்கு இரையாகினர்

### முன்னாள் பொலிஸ் பேச்சாளர் அதிர்ச்சி தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள் பலர் கடல் மீன்களுக்கு இரையாக்கப்பட்டதாக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயகொடி தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)
















நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி நகுலேஸ்வரி மகேந்திரன்



இல. 336/24 ராஜா தியேட்டர் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி நகுலேஸ்வரி மகேந்திரன் 04.07.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மகேந்திரன் (Rtd.A.O RDHS அலுவலகம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர் - ராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், பிரதீபன் (முகாமைத்துவ உதவியாளர்- மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி), விஜிதன் (சுவிஸ் - முன்னாள் உத்தியோகத்தர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

வனிதா, சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜனி, யனுஜன், ஹர்விசன், அஸ்மிதா, அக்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,

காலஞ்சென்ற அரியநாயகம் (Rtd.A.O) , பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி, பாலசுப்பிரமணியம்(ஜெயகிருஸ்ணா ஜுவலறி), காலஞ்சென்ற நடராஜா, தியாகராஜா (ராசன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

புவனராணி, தெய்வேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), புவனேந்திரன், விமலேந்திரன், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2015) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 336/24 ராஜா தியேட்டர் ஒழுங்கை,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(1410)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# கார்த்திகா கொலை; சந்தேக நபர் கைது

(மன்னார்)

புறக்கோட்டை பெஸ்டியன் வீதி, தனியார் பஸ் நிலையத்தில் அண்மையில் பயணப் பொதியில் சடலமாக மீட்கப்பட்ட கார்த்திகாவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேக நபரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தேடி வந்த நிலையில்,

வவுனியா கோயில்குளம் பிரதேசத்தில் வைத்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர், சடலத்தை பயணப் பொதியில் இட்டு தூக்கிச்செல்லும் காட்சிகள் சீ.சீ.டி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

அதன் பின்னணியில் பொலிஸார் தீவிரமாக சந்தேக நபரைத் தேடி வந்துள்ளதுடன். மக்களின் உதவிகளையும் நாடியிருந்தனர்.

இந் நிலையில் இக்கொலை தொடர்பிலான பிரதான சந்தேக நபர் மன்னார் - கோவில் குளம் பகுதியில் வைத்து குற்றத் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (6)


## தேவை

புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் மிக்க புடைவை விற்பனையாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(C-1755)

தொடர்புகளுக்கு:
0777208454

## பொருளியல்

20 வருட அனுபவ ஆசான்
M.C சுதாகரன் (B.Com(Hons), PGDE, M.A(ECO)

**A/L 2016**
- THEORY (தேர்ச்சி -06) பொதுவிலைமட்ட மாற்றங்கள்
- PAPER CLASS WITH REVISION & MCQs

**A/L 2017**
- THEORY (தேர்ச்சி -02) சந்தைச் செயற்பாடு
- MCQs

**வள நிலையங்கள்**

விக்னா - யாழ்நகர்
HAC - சித்தன்கேணி
MEC - மானிப்பாய்
சனி, ஞாயிறு
திங்கள், புதன், வெள்ளி

MODERN - நெல்லியடி
MODERN - பருத்தித்துறை
ஞானோதயா - சாவகச்சேரி
சனி, ஞாயிறு
செவ்வாய், வியாழன்

- நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெறலாம்.
- A/L 2015 பரீட்சையில் 50% இற்கு மேலான எதிர்பார்ப்பு வினாக்கள் வந்ததை (6 பரீட்சைகள்) என்னிடம் கற்ற மாணவர்களிடம் கேளுங்கள். (1409)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபையினர் என்னை நம்பி என்னிடம் கொடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதியின் கவனத்தின் கீழ் கொண்டு வந்துள்ளேன்.தேர்தல் முடிந்ததும் எனது அமைச்சர் அதிகாரத்தைப் பயன்படுத்தி இவற்றை நான் செய்து முடிப்பேன் என உறுதி கூறுகிறேன்.

## யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை

DISTRICT FEDERATION OF FARMERS ORGANIZATIONS JAFFNA
Reg No : DAD/FODF/10

நல்லூர் கமநல சேவைகள் நிலையம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

Nallur Agrarian Service Center
Point Pedro Road,
Nallur, Jaffna.



௩௨/௦௭/ 201௫

(C-367)

கௌரவ அதிமேதகு மைத்திரிபால சிறிசேன,
இலங்கை சோசலிச குடியரசு ஜனாதிபதி,
ஜனாதிபதி செயலகம்.
கொழும்பு.

ஊடாக

கௌரவ திரு அங்கஜன் இராமநாதன் அவர்கட்கு,
ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் யாழ்மாவட்டம்,
மத்திய குழு உறுப்பினர்,
வடமாகாணசபை உறுப்பினர்.



| | | | | |
|---|---|---|---|---|
| ✗ | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |

ஐயா!

யாழ் மாவட்ட விவசாயிகளாகிய எமது பின்வரும் நீண்டகாலப் பிரச்சினைகளை தீர்க்க ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

1. யாழ் மாவட்ட விவசாயிகள் நிலத்தடி நீரினை மின்சாரத்தை பயன்படுத்தியே பெரும்பாலான விவசாயிகள் நீரிறைப்பினை மேற்கொள்ளுகிறார்கள் இதற்கான மாதாந்த மீற்றர் வாடகைக்காக 600.00 ரூபாவும் மின்சாரக் கட்டணமும் அறவிடப்படுகின்றது. இதனை குறைத்து அறவிட நடவடிக்கை எடுத்தல்.
2. யாழ் குடா நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் என்பவற்றின் கூடுதல் உற்பத்தி காலத்தில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதனை கட்டுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திப்பொருளுக்கு நியாய விலை கிடைக்கச் செய்தல் இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியினை அதிகரித்தல்.
3. யாழ் மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு பாரிய களஞ்சியம் இல்லாமல் இருப்பதனால் நாவக்குழியில் அமைந்துள்ள அரச உணவுக் களஞ்சியசாலையில் உள்ள 09 தொகுதியில் ஒரு தொகுதியினை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குவதன் மூலம் நெற் செய்கையாளர்களுக்கு பாரிய உதவி செய்ய முடியும்
4. விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஓவ்தியம் தொகையினை ரூபா 5000.00 ஆக உயர்த்துதலும் ஓய்வுதியம் வழங்காத மாதத்திற்கு வழங்குதலும் புதிய விவசாயிகளை இத்திட்டத்தில் இணைக்க ஆவன செய்தல்.
5. மீளக்குடியமர அனுமதிக்கப்படாத மக்களை மீளக்குடி அமர்த்துதலும் தற்போது மீளகுடி அமர்ந்த விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துதல்.
6. விவசாயம் சார்ந்த கிராமப்புற வீதிகள் மற்றும் யுத்தத்தினால் சேதமடைந்த கிணறுகள், குளங்கள் என்பவற்றை திருத்தம் செய்வதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்தல்.

**அங்கஜன் இராமநாதன்**

**புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## ஜனாதிபதி தேர்தலை நடத்தியது எனது தவறான முடிவுதான்

### சர்ச்சைகளை கிளப்புகிறார் மகிந்த



(கொழும்பு)

ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தியது தவறான முடிவு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

அதைத் தவிர தன் ஆட்சிகாலத்தில் தான் எடுத்த எந்த முடிவு குறித்தும் தனக்கு வருத்தமில்லை என

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் எத்தகைய உதவிகளும் வட மாகாணசபை ஊடாக வழங்கப்படாது

### புனர்வாழ்வு அமைச்சினூடாகவே வழங்கப்படும் - அரசு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஐ.நாவினால் மேற்கொள்ளப்படும் எத்தகைய உதவிகளும், வட்க்கு மாகாணசபை ஊடாக வழங்கப்பட மாட்டாது என்றும், மத்திய அரசாங்கத்தின் புனர்வாழ்வு அமைச்சு ஊடாகவே வழங்கப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளின் பேரில், வடக்கு மாகாணத்துக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க ஐ.நா முடிவெடுத்ததாக, ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் வெளியிட்டிருந்த கருத்து தொடர்பாக அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்தின சார்பில் விளக்கமளித்துள்ள, வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே, மீளக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

# தீய சக்திகளை தோற்கடிப்போம்

## நாட்டை பாதுகாக்க சந்திரிகா அறைகூவல்



(கொழும்பு)

**பொதுத் தேர்தலின் மூலமாக போட்டியிடுகின்ற தீய சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.**


புதிய தேசம் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக கிடைத்த வெற்றியினை இல்லாதொழிப்பதற்கு போட்டியிடுகின்ற பிரதிநிதிகள், மக்களால் தோற்கடிக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கட்சியினை பாதுகாக்க வேண்டுமானால், முதலில் நாட்டை பாதுகாக்க வேண்டும். ஜனவரி 8-ம் திகதி கிடைத்த வெற்றிக்கு அர்ப்பணிப்பு செய்த அனைவரும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி ஒன்று சேர்ந்து நாட்டை பாதுகாப்பதற்காக ஒன்றுபட வேண்டும் என அனைத்து சுதந்திர கட்சி ஆதரவாளர்களிடமும முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிகார மோகத்தில் நாட்டின் ஜன

23ஆம் பக்கம் பார்க்க....

## தபால்மூல வாக்களிப்பில் இடையூறு; முன்னாள் முதலமைச்சர் கைது



(திருகோணமலை)

திருகோணமலையில் வைத்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய

23ஆம் பக்கம் பார்க்க....

## அம்நீசியா மறதி வியாதியால் மகிந்த பீடிக்கப்பட்டுள்ளார்?

### சொன்னவற்றை மறந்து விட்டதாக அஜித் அறிக்கை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ சொல்வதை மறந்து விடும் ஒருவகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன் அவர கூறிய சகலவற்றையும் மறந்து அவர் செயற்படுவது நன்கு தெளிவாகத் தெரிவதாக பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அஜித் பீ. பெரேரா அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசியலில் இனவாதம் கோஷமாகி மதவாதம் தாண்டவமாடுகிறது.

தேசியக் கொடியை விகாரப்படுத்த செயற்பட்ட அவர், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தை பரப்ப செயற்படுகிறார்.

புலிகள் உடன் அவர் கட்டி எழுப்பிய நட்புறவையும் அவர் மறந்து உள்

23ஆம் பக்கம் பார்க்க....

## இரத்தினபுரியில் புராதன சிவலிங்கம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி ஹிதெல்லன பரடைஸ் தோட்டத்தில் புராதன தொல்பொருள் பெறுமதிமிக்க சிவலிங்கம் ஒன்று கிடைத்துள்ளது.

பூமிக்கு அடியில் சுமார் 150 அடி ஆழத்தில் இந்த சிவலிங்கம் காணப்பட்டதாகவும் மாணிக்கக்கல் சுரங்கம் ஒன்றை தோண்டும் போதே இது தென்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் இரண்டு தொன் எடை கொண்ட இந்த சிவலிங்கம், கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது. அகழ்ந்தெடுக்கப்பட்ட இச் சிவலிங்

23ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பில் ஒருவர் வெட்டிக் கொலை



(கொழும்பு)

கொழும்பில் நபர் ஒருவர் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொச்சிக்கடை ரேகன் எனப்படுபவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை ஜம்பட்டா தெருவில் வைத்தே இந்நபர் இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் வந்த நால்வரே இதனைச் செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சியினர் திடீர் இராஜினாமா!


★★★★★★★★★★

(கொழும்பு)

அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

பதவிகளை இராஜினாமா செய

23ஆம் பக்கம் பார்க்க....



யாழ். அரசடி வீதி இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நேற்று இரவு 8 மணியளவில் ஆட்டோவும் பிக்கப் ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் ஆட்டோ தடம் புரண்டு பலத்த சேதத்துக்குள்ளானது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. விபத்துக்குள்ளான ஆட்டோவை படத்தில் காணலாம்.(படம்: சோபிதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## அஹங்காரத்தை விடுதல்

...சந்தேகமின்றி மேலே செல்லவது உங்கள் மனதிற்கு மிகவும் கடினமான செயல்.

ஆனால், இறுதியில் உங்கள் சந்தேகங்கள் விசுவாசமாக மாற்ற மடைந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் முன் னேறுகிறீர்கள் என்று பொருள்.

உங்கள் உள் நோக்கி செல்லச் செல்ல. இது நிகழும்.

நாங்கள் செய்ய வேண்டி யது என்ன, ஸ்வாமிஜி?

வெறுமனே, முழுமையாக கவனிப்பவராக மாறுங்கள். இது எல்லாமே ஒரு நாடகம்தான்; நீங்கள் தற்செயலாக அதில் ஒரு பாத் திரத்தில் நடித்தாலும் அதை வெறுமனே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள் என்பதை உணர ஆரம்பித்து



அன்பில் விழுந்து விடுங்கள், அவ்வளவுதான்!

முழுமையாக அன்பில் விழு தல் என்பது, முழுமையாக அஹங்காரமற்ற நிலையில் விழுந்து விடுதலாகும்.

அதனால்தான் அஹங்கா ரமற்ற நிலையில் இருக்கும் ஒரு குருவால், அன்பாகவும் பரி வாகவும் மட்டுமே இருக்க முடியும்.

கோபம், எரிச்சல் போன்ற மற்ற எல்லா உணர்ச்சிகளுக் குமே அவருடைய எல்லையற்ற அன்பின் போலியான வெளிப் பாடுகள்தான். அவர் கோப மாகவும் எரிச்சலாக வும் இரு ப்பதாக பாவனை செய்கி றார். அவர் உங்கள் நிலைக்குக் கீழிற ங்கி வந்து, உங்கள் நிலையில் உணர் ச்சிகளை வெளிப்படுத்தி, இன்னு மொரு புரிந்துகொள்ளும் நிலை வாயிலாக அழைத்துச் செல்கிறார். அவ்வளவே.

நீங்கள் அவரது மொழியான பிர பஞ்ச இருப்புத் தன்மையின் மொழி யைப் புரிந்துகொள்ளும் வரை அவர் உங்கள் மொழியிலேயே பேசுகிறார்!

ஆனால், ஸ்வாமிஜி, எவ்வாறு முழுமையாக அன்பில் விழ ஆரம் பிப்பது? அது சொல்வது சுலபம், செய்வது கடினம் போல் தோன்று கிறதே!

முதல் விடயம்... உங்களுடைய ஒவ்வொரு செயலிலும் விழிப்புணர்வைப் பாய்ச்சுங்கள்.

### ஆன்மீகம் 251

விடுவீர் கள்.

இரண்டாவது விடயம்... நீங்கள் பார்ப்பது எல்லாவற் றையும் எடைபோடுவதை நிறுத்துங்கள்.

எடை போடுவதை நிறு த்தினாலே, எல்லாரையும் எல்லாவற்றையும் முழுமை யான கள்ளங்கபடமற்ற தன்மையுடன் வெறுமனே நேசிப்பீர்கள்.

எடைபோடும் பொழுது நீங்கள் என்ன இருக்கிறதோ அதைப் பார்ப்பதில்லை; எதைப் பார்க்க விரும்புகி றீர்களோ அதையே பார்க் கிறீர்கள்.

நம்மில் பலரும் ஏற்க னவே, முன்னதாகவே முடிபு கட்டி விட்டோம். அவையே நமக்கு அடித்தளக் கற்களா கும். பின்னர் நாம் அதையே ஒரு திடமான அடிப்படை யாகக் கொண்டு வெறுமனே செயற்படுகிறோம்.

பிறகு நான் எதைப் பார்த் தாலும் முதலில் செய்வது அதை முன்கூட்டியே எடுத்த தீர்மானத்தின் கண்ணோட்டத்தில் பார்ப்பதுதான். நாம் இது போன்று செயற்படு வோமாயின், எவ்வாறு விடயங்களை உள்ளது உள்ளவாறே பார்ப்பது?

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# தேர்தல் கருத்துக் கணிப்பு

## மாபெரும் போட்டி

- யாழ்ப்பாணம்-கிளிநொச்சி
- வன்னி

**தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள்**

1. பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?
2. பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?

உங்கள் கருத்துக்கு பெறுமதியான பரிசில்கள்

### போட்டி நிபந்தனை

- ஒருவர் ஒரு கருத்துக்கணிப்பை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்
- போட்டியாளர் தாம் சார்ந்த தேர்தல் மாவட்டத்தின் முடிவை மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வலம்புரியில் வெளிவரும் விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு போட்டி முடிவுடன் இணைக்கப்பட வேண்டும்.
- முடிபுகள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தேர்தல் கருத்துக் கணிப்பு - 2015 என தவறாது குறிப்பிடவும்.

உங்கள் கருத்துக்கணிப்பை 06.08.2015 தொடக்கம் 14.08.2015 வரை அனுப்ப முடியும் அனுப்பவேண்டிய முகவரி பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### போட்டிக்கான விண்ணப்பப்படிவம்

போட்டியாளரின் முழுப் பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தொலைபேசி இல. : ..............................

தேசிய அடையாள அ.இல. : ..............................

..............................

போட்டியாளரின் கையொப்பம்

# இராசி பலன்

06.08.2015
(ஆடி 21, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி பின்னிரவு 1.23 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 12.59 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சுபநேரம் 7.34- 9.04 மணிவரை
அமிர்த சித்தம்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | கிரகநிலை | | சூரி செவ் |
| | | | குரு சுக்,புத |
| | | சனி | ராகு |

**வளவன்**

**மேடம்:** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வேலைச்சுமை கூடும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறைகள் கேட்கும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மைதரும், கௌரவமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலனில் உற்சாகம் பெறுவீர்கள்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடு நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், எதிர்பாராத பயணங்கள் இடம்பெறலாம், மறைமுக போட்டிகள் மாறும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம்.

**துலாம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நண்பர்கள் சந்திப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பணத்தோவைகள் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள். ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எந்த நிநிலையிலும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்கும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு காய்ச்சலினால் 32 பேர் உயிரிழந்தனர்

நாட்டில் கடந்த ஏழு மாதங்களில் டெங்கு காய்ச்சலினால் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன் 17 ஆயிரத்து 236 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பபா பளிஹவதன தெரிவித்தார்.

மேலும் கடந்த ஏழு வருடங்களின்பின் டெங்கு நோய் குறைந்துள்ளதாகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்ந்த ஏழு மாதங்களில் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 5178 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 2379 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 886 பேரும் கண்டி மாவட்டத்தில் 742 பேரும் யாழ்ப்பாணத்தில் 1163 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1284 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 849 பேரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மட்டக்களப்பு, புத்தளம், அநுராதபுரம், குருநாகல், யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, கண்டி ஆகிய மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலினால் 32 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக தங்கள் வீடுகள், கட்டடங்களை அடிக்கடி சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயை கட்டுப்படுத்தலாம் எனவும் இரண்டு நாட்கள் தொடர்ந்து காய்ச்சல் நீடித்தால் உடனடியாக அரச வைத்திய சாலையை நாடுமாறும் பபா பளிஹவதன மக்களிடம் கேட்டுக் கொண்டார். (இ-7)

# தேர்தல் விதிமீறல்கள் குறித்து இதுவரை 961 முறைப்பாடுகள்

## கபே சுட்டிக்காட்டு

**தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் இதுவரையில் 961 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கபே என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. தேர்தல் விதிகளை மீறுதல் தொடர்பில் 887 முறைப்பாடுகளும், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 74 முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன.**

கொழும்பு, பதுளை, அநுராதபுரம், கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான தேர்தல் விதி மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொதுச் சொத்து பயன்பாடு, அரச ஊழியர்களை பிரசாரத்தில் ஈடுபடுத்தல், நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், சட்டவிரோத தேர்தல் பிரசாரங்கள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாள்ர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் சட்டவிரோத தேர்தல் பிரசாரக் காரியாலயங்களை நடத்தி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)




# சுதந்திரக் கட்சியில் இரு அணிகள் இல்லை

## மகிந்த விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டு அணிகள் இல்லை எனவும் ஒரே அணியே இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


பொலநறுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றி பெற செய்து நேர்மையான நாடாளுமன்றத்தை ஸ்தாபிக்க, பொலநறுவையிலிருந்து 4 நாடாளு மன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டியது மக்களின் கடமை எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர், ஜனாதிபதியானதாகவும் அது தனக்கு பிரச்சினையாக இருக்கவில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 31 ஆம் நாள் நினைவலைகளுடன் கண்டி தெல்தெனியவில் சிவனின் கல்லறையில் நிர்மாணிக்கப்பட்ட கோவில் திறப்பும் சிவலிங்கம் வைத்தலும்




## செல்வன் சிவன் வேலாயுதம்

அன்னை மடியில் : 01.12.1995
ஆண்டவன் அடியில் : 06.07.2015

சிவனே நீ திடம் வைத்தாய் மண்ணில்
சிவத் தொண்டரானோம் நாம்
உளங் கொள்ளை கொண்ட பிள்ளையே
ஊருக்குதவ கருத் தந்தவனே
பெயரே சிவன் சிவமயமே யானாய்
ஊர் சொல்ல ஒரு புதல்வனாய்
அவதரித்து பெயர் மட்டும் ஒலிக்க விட்டு
பேழைக்குள் ஓரவனாய் உறங்கச் சென்றதனால்
ஓராயிரம் உறவுகள் ஊர் கூடி அழ
வானவர் கண்ணீர் வான் மழையாக
புதைத்த பூமியை நனைத்ததினால்
விதைத்த நீ விருட்சமாவாய் ஐயா

**செல்வன் சிவன் வேலாயுதம் அவர்களின் 31ஆம் நாள் அன்னதான நிகழ்வு 06.08.2015 இன்று வியாழக்கிழமை நடைபெறும்.**

**குடாநாட்டில் 86 கிராமங்களில் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும்.**

06.07.2015 திங்கட்கிழமையன்று இறைபதம் எய்திய எமது பாசமிகு புதல்வனின் மறைவுச்செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரையிலும் இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சிவன் வலது குறைந்தோர் நிலையத்தின் 14 கிளையிலுள்ள சிறார்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் 06.08.2015 இன்று வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தெல்தெனியவிலுள்ள சிவன் வலது குறைந்தோர் நிலையத்தில் நடைபெறும் கோவில் திறப்பு வைபவத்தில் சகலரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**வே.கணேஷ்வரன் - தலைவர், சிவன் பவுண்டேசன்**
**தலைமையகம் - ஒருத்தோட்டை, தெல்தெனிய, கண்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்.மாவட்டம்



5
(சி-363)
ந.மதிஅழகராசா (மதி)
முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்
X 5
தமிழர் விடுதலைக் கூட்டணி
மாற்றம் ஒன்றே மாறாதது...

பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



4
(056)
காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Dip-in Ed, MEd
தமிழர் விடுதலைக் கூட்டணி
X 4
நேர்மையான அரசியல் தடத்தில் பயணிக்க...

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

தமிழர் தேசியம், தாயகம், சுயாட்சிக் கொள்கையின் விசுவாசியாக, ஒடுக்கப்படும், ஏமாற்றப்படும் மக்களின் உரிமைக்குரலாக, வளர்முக சமூகங்களின் புதிய அரசியல் தலைமையின் ஆரம்பமாகச் செயற்படும் அண்ணன் இராசேந்திரனை வெற்றிபெற வைப்போம்.



ஆறுமுகம் நடேசு
இராசேந்திரன்
HNDA,APFA,ACA,FMAAT,FIPFM(UK)
சிரேஷ்ட கணக்காளர்,
முன்னாள் தலைவர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை.
(சி-363)
சுயேட்சைக் குழு
இலக்கம் - 2
X 1


# மகிந்தவின் பிரியாவிடை கோரிக்கையினால் பிளவு

மகிந்த ராஜபக்ஷ கௌரவமான பிரியாவிடைக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சந்தர்ப்பம் கோரியது தொடர்பில், ஊடகங்கள் மூலம் தகவல் வெளியாகியமையினால் இது வரையில் முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

விசேடமாக இத்தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னர் முன்னணி தலைவர்களிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளாது, மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ தங்கள் தனிப்பட்ட விருப்பத்திற்கமைய செயற்பட்டுள்ளதாகவும், மகிந்த ராஜபக்ஷவினால் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செயற்பாடுகளினால் முன்னணியில் அவரை ஓரங்கட்டவுள்ளதாக முன்னணி சிரேஷ்ட தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இதுவரையில் மகிந்த ராஜபக்ஷவின் இவ்வாறான தீர்மானத்தினால் முன்னணியில் மகிந்த தரப்பினர் மிகவும் மனவருத்தத்துடன் இருப்பதாகவும், தங்களின் கேள்விகளுக்கு அவரால் ஒரு திட்டவட்டமான பதிலை வழங்க முடியாதுள்ளமையினால் தங்களுக்கு அசௌகரியமாக உள்ளதாக மகிந்த தரப்பினர் குறிப்பிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)


## University of Jaffna- Sri Lanka
## Faculty of Management Studies & Commerce

**Postgraduate Diploma in Management (PGDM)**
**Leading to the Degree in Master of Business Administration (MBA)**
**Intake II-2015/2016**

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Postgraduate Diploma in Management (PGDM) for the academic year 2015/2016 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: ***http://www.jfn.ac.lk/maco***

**ELIGIBILITY REQUIREMENTS**

1.Graduates in any discipline in any recognized University
OR
2.Professional Qualifications with five years experience.
OR
3.Any other qualifications and/or experience, which would be acceptable to the selection board with the approval of the Senate.

**PROGRAMME STRUCTURE**

Structure - Semester based Course Unit System
Semester duration - Each Semester extends for 20 weeks
Duration - Two years
Medium of instruction - English

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 (PGDM) | Year 2 (MBA) |
|---|---|---|
| Registration/ Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

**Application Fees: LKR 2000/=**

**APPLICATION PROCEDURE**

Application form & Paying in voucher can be downloaded from the Faculty website at ***http://www.jfn.ac.lk/maco*** or obtained from **Dean, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelvely, Jaffna**, by sending a self addressed stamped envelope 100 x 225mm in size. The closing date for applications will be 10.09.2015. Please forward complete application form to the above address and indicate **"Application for MBA"** in the top left hand corner of the envelope.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka.** (C-1754)


# ஜெனீவாவை எதிர்கொள்ள விசேட பொறிமுறை வரும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை விவகாரம் தொடர்பான ஜெனீவா அறிக்கைக்கு எமது அரசாங்கம் வெற்றிகரமான முறையில் முகங் கொடுக்கும் எனவும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் சர்வதேச ஒத்துழைப்புடன் விசேட பொறிமுறையொன்றை ஆரம்பிப்போம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கான உரிய தீர்வினை முன்வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு நாட்டை முன்னகர்த்தி செல்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

என்னை தோற்கடிப்பதற்கு 2005 இல் பிரபாகரனுடன் மகிந்த ராஜபக்ஷ உடன்படிக்கை செய்து கொண்டமையின் ஊடாக தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாவிடின் , என்னுடைய நல்லிணக்க செயற்பாடுகள் மாத்திரம் எவ்வாறு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறும் என்றும் பிரதமர் கேள்வி எழுப்பினார்.

கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தர் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டை கட்டியெழுப்புவதற்கு சிறுபான்மை மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்ப்பது மிகவும் அவசியமாகும். நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் கொண்டு நாட்டை வளர்ச்சிக்குட்படுத்துவதே எமது குறிக்கோளாகும்.

நாட்டின் முப்பது வருடகால யுத்தம் நிறைவடைந்துள்ளது. சிறுப்பான்மை மக்களின் நலன்கள் தொடர்பில் நாம் ஆராய வேண்டியுள்ளது. தேசிய பிரச்சினை தீர்வு விடயத்தில் தென்னாபிரிக்காவின் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவை நாம் நியமிப்போம். மேலும் தீர்வு விடயத்தில் சர்வதேச ஒத்துழைப்புடன் நாம் செயற்படவுள்ளோம். இதற்கான ஆலோசனைகளை நாம் சர்வதேச நாடுகளிலிருந்து கோரவுள்ளோம்.

எனினும் நாட்டை காட்டிக்கொடுக்கும் வகையில் சர்வதேசத்தை இந்த பிரச்சினையின் தலையிட வைத்தது. மகிந்த ராஜபக்ஷ வாதத்தை சர்வதேச விசாரணைக்கு முழுமையான பொறுப்பை மகிந்த ராஜபக்ஷவே ஏற்கவேண்டும்.

நாட்டில் உள்ளக பொறிமுறையொன்றை ஆரம்பிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் வாக்குறுதி அளித்து அதனை மீறி செயற்பட்டமையினாலேயே சர்வதேச அழுத்தங்கள் இலங்கைக்கு எதிராக திரும்புவதற்கு பிரதான காரணமாகும்.

மேலும் செப்டெம்பர் மாதம் அளவில் இலங்கை தொடர்பில் ஜெனீவா குழுவின் அறிக்கை வெளியிடப்படவுள்ளது. இது எமக்கு புதியதொன்றல்ல.பல தடவை குறித்த அறிக்கை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த அறிக்கை தொடர்பில் முன்னைய அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்எவ்வாறு செயற்பட்டார்என்பது எமக்கு தெரியாது. இருந்த போதிலும் இந்த அறிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் வெற்றிகரமாக முகங்கொடுக்கும்.

ஆகவே நாட்டின் நல்லிணக்கத்தை முன்னகர்த்துவதே எமது அரசியலின் பிரதான திட்டமாக உள்ளது. மேலும் சிறுபான்மை மக்களின் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஒத்துழைப்பை கொண்டு தீர்வு காண திட்டமிட்டுள்ளோம்.

பிரச்சினைகளுடன் எம்மால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. இன ரீதியான பிரச்சினைக்கு நாம் முடிவுக் கட்டி நல்லிணக்கம் மற்றும் இன மதங்களுக்கிடையிலான ஒற்றுமை விடயத்தில் நாட்டை முன்னகர்த்த வேண்டியு ள்ளது.

மேலும் தற்போது தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி வருகின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட இடமளிக்க போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

**எமது படைவீரர்கள் உயிர்த்தியாகம் செய்து வெற்றி பெற்ற சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாத்து அவர்களது பிரார்த்தனையாகவிருந்த இன மற்றும் சமய நல்லிணக்கம் நாட்டில் கட்டியெழுப்பப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

நாட்டை சமாதானமான ஒரு நாடாக முன்கொண்டுசெல்ல வேண்டுமானால் நாட்டில் வாழும் எல்லா இனங்களுக்கு மத்தியிலும் நம்பிக்கையீனத்தைப் போக்கி சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, தற்போதைய அரசாங்கம் இதற்காக மிகவும் அர்ப்பணத்துடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு பாதுகாப்பு சேவைக் கல்லூரியின் 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாய் நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த மற்றும் அங்கவீனமுற்ற படைவீரர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக அரசாங்கம் என்ற வகையில் செய்ய முடியுமான அதியுயர்ந்த கடமைகளை செய்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



படைவீரர்கள் தமது உயிர்களை தியாகம் செய்தது முழு தாய் நாட்டிற்காகவுமாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவர்களது பிள்ளைகளை கவனிக்க வேண்டியதும் அவர்களது எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டியதும் சமூகத்தில் எல்லோரினதும் பொறுப்பாகும் என்றும் தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் பீ.எம்.யு.பஸ்நாயக்க உள்ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளும் முப்படைத் தளபதிகளும் உயர் அதிகாரிகளும் இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர். (இ-7)

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் 17 ஆம் திகதி ஆரம்பம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 22 ஆம் திகதி சனிக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத்திருவிழாவும் 26ஆம் திகதி புதன்கி ழமை சப்பறத்திருவிழாவும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)

## நாட்டை பிளவுபடுத்தும் தேர்தல் பிரசாரங்கள்

### சுமங்கலதேரர் அச்சம்

(கொழும்பு)

சொல்வதற்கு எதுவுமின்றி சில அரசியல் கட்சிகள் நாடு பிளவடையும் என தேர்தல் பிரசார மேடைகளில் கூறி வருவதாக மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பீடம் ஏறினால் நாடு பிளவடையும் என பிரசாரம் செய்யப்படுகின்றது.

அனைத்து தேர்தல் காலங்களிலும் சில கட்சிகள் இந்த கோசத்தை தேர்தல் பிரசார மேடையில் எழுப்புவதனை வழக்கமாகக் கொண்டுள்ளன.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் மக்களின் தேவைகளை அறிந்து அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக தென்படவில்லை. இன்னும் கொஞ்சக் காலம் ஆட்சியில் இருந்திருந்தால் கண்டியிலும் துறைமுகமொன்று அமைக்கப்பட்டிருக்கும்.

பிள்ளையானுக்கு கூட்டமைப்பில் தேசியப் பட்டியல் உறுப்புரிமை வழங்குவதாக அறியக் கிடைத்தது. கருணாவிற்கு அவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையா?

கண்டியில் நிலவி வரும் வாகன நெரிசலைத் தடுக்க தலதா மாளிகைக்கு எதிரில் உள்ள பாதையை திறக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

கடந்த அரசாங்கத்தினால் எல்லையில்லாமல் செய்த ஊழல் மோசடிகளை தடுக்கும் நோக்கில் அபிவிருத்தி திட்டங்களை இடைநிறுத்தியதில் தவறில்லை என கண்டி மல்வத்து பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் லக்ஸ்மன் கிரியல்ல, மல்வத்து பீடாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். (இ-7)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சுயேட்சைக் குழு-5

புதிய அரசியல்... X 3

வீ.ஆ.ஜெயசங்கரி B.A.
(Public Administration & Governance)

3 பட்டம்: நேர்மை, தகமை, சேவை

வாக்குகளை பிரித்து வழங்குவீர்
ஒரு கட்சி ஆதிக்கம் வேண்டாம்
ஒவ்வொரு அணியிலும் ஓர் இருவர் போதும்

(068)


# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி பர்வத வர் த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ் தானத்தின் மஹோற்சவத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறவுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திரு விழாவும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 தேர்த்திருவிழாவும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்ப கல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)


## வாடகைக்கு

யாழ். நாவலர் வீதியில் வைமன் வீதி சந்தியில் அமைந்துள்ள வீடு அலுவலக பாவனைக்கு அல்லது தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:- 075 656 3318

(1753)

## கணக்கு எழுதுநர்/ களஞ்சிய பொறுப்பாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் வர்த்தக நிறுவனத்திற்கு கணக்கு பதிவாளர்கள், களஞ்சிய பொறுப்பாளர்கள் இருபாலாரும் தேவை.

விளம்பர இலக்கம் (சி-1752)
வலம்புரி அன்கோ
இல.3,2ஆவது ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1752)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 29 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில் பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/4811 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16 சூரிசெவ் 12 இல்<br>தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்<br>தொ.இ: G/4827 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 78 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4815 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 56 செவ் 1 இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: பட்டப்படிப்பு இறுதியாண்டு/ ஆசிரியர்<br>தொ.இ: G/4828 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 2 1/2<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4817 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 56 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MA/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4833 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 65 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4819 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 58 செவ் 1 இல்<br>உயரம்: 4'6"<br>தகைமை/தொழில்: CIMA/ வங்கியாளர்<br>தொ.இ: G/4837 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 09.08.2015 ஆம் திகதி எமது மகா சபையின் விசேட பொதுக்கூட்டம் சன்மார்க்க ஐக்கிய வாலி பர் சங்க மண்டபம் யாழ்ப்பாணத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு மகா சபையின் முன்னாள், இந்நாள் உறுப்பினரையும் நலன் விரும்பிகள், அனுதாபிகள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பி.ஜே.அன்ரனி , பொதுக்காரியதரிசி
(அ.இ.சி.தமிழர் மகா சபை)

(1403)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுவேந்திரராஜா காசிராஜா

05.07.2015அன்று இளஞ் சைவப் புலவர் பட்டத்தை பெற்றுக் கொண்ட எமது சக உத்தியோகத்தர் சுவேந்திராஜா காசிராஜாவை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி,
பண்டத்தரிப்பு.


# ராடா நிறுவனத்தின் பணிப்பாளர் மனநோயாளர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

ராடா நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாக பணிப்பாளராக பணியாற்றிய கலாநிதி ஜயந்த சமரசிங்க அங்கொட மன்நோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி அனில் டி சில்வா கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

ராடா நிறுவனத்தில் நடந்துள்ள ஊழல், மோசடி தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு விளக்க மறி யலில் வைக்கப்பட்டுள்ளார்.

ராடா நிறுவனத்தில் இடம் பெ ற்ற ஊழல், மோசடிகள் சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் வெளியில் இருக்கும் போது, அவர்களை கைது செய்யாது ஜயந்த சமர சிங்கவை கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளதால், ஏற்பட்ட உளநல பாதிப்பு காரணமாக அவர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி தெரிவித்தார்.

ஜயந்த சமரசிங்கவை பிணை யில் விடுவிக்குமாறு சட்டதரணி விடு த்த கோரிக்கையை நிராகரித்த நீதவான், அவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறிய லில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ராடா நிறுவனத்தின் தலைவராக பணியாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸை கைது செய்ய, குற்றப் புலனாய்வு பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் டிரான் அலஸ் உயர் நீதிமன்றத்தில் பெற்றுள்ள தடை யுத்தரவு காரணமாக அவரை இது வரை கைது செய்ய முடியவில்லை.

ராடா நிறுவனத்தின் ஊடாக விடுத லைப் புலிகள் அமைப்புக்கு கோடிக் கணக்கான ரூபா பணம் வழங்கப்பட் ட தாக கூறப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை நிர்மா ணித்து கொடுப் பதற்காக இந்த நிதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# வடஇலங்கை சங்கீத சபையின் செயன்முறைப் பரீட்சை-2015

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படவுள்ள செயன்முறைப்பரீட்சை இன்று வியாழக்கிழமை ஆரம் பமாகி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

தரம்1 தொடக்கம் தரம் 4 வரை உள்ள ஆரம்பப்பிரிவு மாணவர்கள் இச் செயன்முறைப் பரீட்சையில் கலந்து கொள்ள முடியும்.

சங்கீதம்,நடனம்,பண்ணிசை,நாடகமும் அரங்கிய லும்,மிருதங்கம் என்பன இச்செயன்முறைப்பரீட்சை யில் இடம்பெறவுள்ளன.


இதில் தரம் 1 தொடக்கம்தரம் 3 வரை உள்ள மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் சுன்னாகம் மருதனார் மடத்தில் அமைந்துள்ள இலங் கைச் சங்கீதசபை மண்டபத்திலும் தரம் 4 மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இணுவில் இந்துக்கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

யாழ்.இணுவில் மத்திய ஆரம்பப்பா டசாலையில் நடைபெற இருந்த இச் செயன் முறைப்பரீட் சைகள் யாவும் தற்போது மேற்குறிப்பி ட்ட இடங்களில் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளமையும்குறிப்பிட த்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு மிட்டாய்....!



ரொம்ப ரொம்ப வருடங்களுக்கு முன்னால் டில்லி நகரத்தை ஒரு சுல்தான் ஆண்டு வந்தார்.

அவருக்கு சலீமா என்ற ஒரு பெண். பேரழகி சலீமா அழகோடு மட்டுமல்ல, ரொம்ப ரொம்ப நல்ல வளும் கூட. எந்தப் பிராணிகளுக்கும் அவள் தீங்கு செய்யமாட்டாள்.

அவள் ஒரு சின்ன அழகிய வெள்ளைக் குதிரையை அன்புடன் வளர்த்து வந்தாள். அதற்கு "பிரதாப்" என்று பெயர்.

சலீமா அடிக்கடி தன் அழகிய குதிரை மீது ஏறிக் கொண்டு, வெகுதூரம் போய்விடுவாள். சில நாளைக்கு வானம் இருண்டு மழையும், இடியுமாக இருக்கும்.

சலீமா அரண்மனைக்குத் திரும்ப மாட்டாள். சுல்தான் பயந்து சலீமாவைத் தேட வீரர்களை அனுப்புவார்.

ஆனால், அவர்களுக்கு முன்னால் சலீமாவை, "பிரதாப்" மிகுந்த ஜாக்கிரதையுடன் அரண்மனைக்குக் கொண்டு வந்து சேரத்துவிடும்.

"பிரதாப் இருக்கும்போது நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் அப்பா!" என்று சலீமா பெருமையுடன் அதைத் தட்டித் தடவிக் கொடுப்பாள்.

ஒருநாள் சலீமா, பிரதாப் மீது ஏறிக் கொண்டு நகரத்துக்கு அப்பால் வெகுதூரம் வந்துவிட்டாள்.

அது ஒரு மலைப்பிரதேசம். மலையுச்சியில் நின்றுகொண்டு தன் நாட்டைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள் சலீமா.

அப்போது "அம்மே" என்று ஆட்டுக் குட்டியின் சத்தம் கேட்கவே, திடுக்கிட்டு சுற்று முற்றும் பார்த்தாள்.

இந்தக் காட்டில், அதுவும் மலையில் ஆட்டுக்குட்டி ஏது என்று யோசனை செய்யும் போது, கீழே ஒரு மலை இடுக்கில் ஒரு கறுப்பு ஆட்டுக்குட்டி நடுங்கிக் கொண்டு தனியாக நிற்பதைக் கண்டாள்.

பக்கத்துப் பாறை இடுக்கில், ஒரு ஓநாய் அதன் மீது பாய குறி பார்த்துக் கொண்டிருந்தது.

மேலே பெரிய பருந்துகள் இரண்டு ஆட்டுக் குட்டியைத் தூக்கிச் செல்லக் காத்திருந்தன.

"ஐயோ பாவம்! ஆட்டு மந்தையிலிருந்து எப்படியோ இந்தப் பொல்லாத குட்டி தனியாக வந்து இங்கு சிக்கிக் கொண்டிருக் கிறது," என்று சொல்லிக்கொண்டே குதிரையிலிருந்து கீழே குதித்து, கையில் கத்தியுடன் மெதுவாக, ஆட்டிக்குட்டி நின்று கொண்டிருந்த பாறைக்கு இறங்கினாள் சலீமா.

கொஞ்சம் கால் தவறினால் அதள பாதாளத்திற்குத் தான் போக வேண்டும். அவ்வளவு பயங்கரமான பாதை.

சலீமா ஆட்டுக் குட்டியைக் காப்பாற்றிவிட்டாள். நடுங்கும் அதைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு, கஷ்டப்பட்டு மேலே ஏறினாள்.

மேலே சென்றதும் சலீமா திடுக்கிட்டாள். ஏன் தெரியுமா? அவள் குதிரையான பிரதாபைக் காணவில்லை. அவளைத் தனியாக விட்டுவிட்டு இதுவரை அது இப்படிப் போனதே இல்லை.

பலமாக, "பிரதாப்" என்று கூப்பிட்டாள். வெகு நேரம் காத்திருந்தாள். கால் கடுக்கத் தேடினாள். பிரதாப் வரவே இல்லை.

அதை யாரோ பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும். சலீமா ஆட்டுக் குட்டியையும் சுமந்துகொண்டு நடந்து அரண்மனையை அடைந்தாள்.

நடந்தே பழக்கமில்லாததால், அவள் கால்களில் ரத்தம் கசிய ஆரம்பித்தது.

சலீமாவைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த சுல்தான் நடந்த சங்கதிகளைக் கேட்டதும், "குழந்தாய், கவலைப்படாதே, உன் குதிரையைத் தேடிக் கொண்டு வர கட்டளையிடுகிறேன்," என்று சமாதானப்படுத்தினார்.

சலீமா ஆட்டுக்குட்டிக்குப் பால் ஊற்றி, அதைப் பட்டு மெத்தையில் படுக்க வைத்துவிட்டு, தன் அழகிய குதிரையை நினைத்துக் கண்ணீர் விட்டாள்.

ஒரு வாரமாயிற்று. குதிரையைத் தேடி சென்றவர்கள் எல்லாரும் வெறும் கையுடன் திரும்பி வந்தனர்.

சலீமாவிற்கு அழுகை அழுகையாக வந்தது. அப்போது அப்துல் அவளிடம் வந்து, "சலீமா, அழாதே... நான் உன் குதிரையைக் கொண்டு வருகிறேன்.

யாராவது கொள்ளைக் கூட்டத்தார்தான் குதிரையை இழுத்துக்கொண்டு போயிருப்பர்," என்று அவளைச் சமாதானம் செய்து குதிரையைத் தேடக் கிளம்பினான். அப்துல் சலீமாவுடன் சிறுவயது முதல் பழகியவன். சேனாதிபதியின் மகன். (தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2015
06

- 1661 - போர்த்துக்கல்லுக்கும் டச்சுக் குடியரசுக்கும் இடையில் டச்சு பிரேசில் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது.
- 1806 - கடைசி புனித உரோமப் பேரரசன் இரண்டாம் பிரான்சிஸ் நெப்போலியனுடனான போரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அப்பேரரசு முடிவுக்கு வந்தது.
- 1825 - பொலிவியா ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனியின் 10 கடற்படை படகுகள் பிரித்தானியப் படகுகளைத் தாக்கவென வட கடலை நோக்கிப் புறப்பட்டன.
- 1914 - முதலாம் உலகப் போர்: சேர்பியா ஜேர்மனி மீதும் ஆஸ்திரியா ரஷ்யா மீதும் போரை அறிவித்தன.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா சின்னப் பையன் என்ற பெயரைக் கொண்ட அணுகுண்டை வீசியது. கிட்டத்தட்ட 70,000 பொதுமக்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். இதன் தாக்கத்தினால் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் அடுத்த சில ஆண்டுகளில் இறந்தனர்.
- 1952 - இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் மாறியது.
- 1960 - கியூபா புரட்சி: அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்ததை அடுத்து கியூபா தனது நாட்டில் இருந்த அமெரிக்க மற்றும் வெளிநாட்டு மூலதனங்களை நாட்டுடமை ஆக்கியது.
- 1961 - வஸ்தோக் 2: முதன்முதலாக ஒரு முழு நாள் மனிதன் விண்வெளியிலிருந்த பெருமையை சோவியத் விண்வெளிவீரர் கேர்மொன் டீட்டொவ் பெற்றார்.
- 1962 - ஜமெய்க்கா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது.
- 1964 - அமெரிக்காவில் நெவாடா மாநிலத்தில் உலகின் மிகப் பழமையான மரமாகக் கருதப்பட்ட 4900 ஆண்டு பழமையான புரொமேத்தியஸ் என்ற மரம் வெட்டப்பட்டது.
- 1991 - உலகளாவிய வலை தொடர்பான தனது ஆவணங்களை டிம் பேர்னேர்ஸ்-லீ வெளியிட்டார்.
- 1996 - செவ்வாயிலிருந்து தோன்றியதாகக் கருதப்படும் ஏ.எல்.எச் 84001 என்ற விண்கல் ஆரம்பகால உயிரினங்கள் பற்றிய தகவலைக் கொண்டிருப்பதாக நாசா அறிவித்தது.
- 2006 - திருகோணமலையில் நோயாளரை ஏற்றி வந்த ஆம்பியூலன்ஸ் வண்டி எறிகணைத் தாக்குதலுக்குள்ளானதில் ஒரு நோயாளி கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1881 - அலெக்சாண்டர் பிளெமிங், நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் (இ. 1955)

### இறப்புகள்

- 1978 - திருத்தந்தை ஆறாம் பவுல் (பி. 1897)
- 2009 - முரளி, மலையாள நடிகர் (பி. 1954)
- 1984 - ஆழிக்குமரன் ஆனந்தன் (பி. 1943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழிக்குமரன் ஆனந்தன்



விவேகானந்தன் செல்வகுமார் ஆனந்தன் (V.S.Ananthan) மே 25, 1943 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் பிறந் தார்.

இவர் ஒரு சிறந்த குறிப்பிட்டுக் கூறக் கூடியளவுக்கு திறமை வாய்ந்த ஒரு வீர னாக விளங்கினார். தன்னுடைய குறுகிய வாழ்க்கையில் 20 சாதனைகளை முறியடித்து சாதனை படைத்துள்ளார். இவ் 20 சாதனைகளிலும் 07 சாதனைகள் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஏனைய சாதனைகளை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்வதற்குரிய விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட வேளை சில சாதனைகள் வேறு வீரர்களால் முறியடிக்கப்பட்டுவிட்டன. சில சாதனைகள் முறையான சாதனைகளாக இனங்காணப்படவில்லை. 1982 இல் ஆறு சாதனைகளை தொடர்ச்சியாக செய்திருந்தார். கின்னஸ் புத்தகத்தில் 07 முறைகள் பெயர் பதியப்பெற்ற சாதனையாளர் ஆழிக்குமரன் ஆனந்தன் மட்டுமே. இது மற்றுமொரு சாதனையாகும்.

### கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள ஏழு உலக சாதனைகள்

- ✦ பாக்குநீரிணையை நீந்தி கடத்தல்- ஏப்ரல் 1975 (இருவழிப் பயணம்)
- ✦ இடைவிடாத சைக்கிள் ஓட்டம்- மே 1979-1487 மைல்கள் 187 மணித்தியாலங்களுக்குள் (7.8 நாட்கள்)
- ✦ தொடர்ச்சியான போல் பஞ்சிங்- டிசெம்பர் 1979 136 மணித்தியாலங்கள் 28 நிமிடங்கள் (5.7)
- ✦ ஒற்றைக்காலில் நிற்றல்- மே 1980- 33 மணித்தியாலங்கள்
- ✦ இருந்து எழும்புதல்- மே 1980- 165 தடவைகள் (2 நிமிடங்களுக்குள்)
- ✦ உயரத்தில் பந்தடித்தல்- டிசெம்பர் 1980 -9100 உதைகள் (6 மணித்தியாலங்கள் 51 நிமிடங்கள்)
- ✦ தவளை போல் நீரினுள் இருத்தல்- ஜுலை 1981 (80 மணித்தியாலங்கள் 3.3 நாட்கள்)
- ✦ ஒற்றைக்காலில் நிற்றல் இருந்து எழும்புதல் ஆகிய இரண்டு கின்னஸ் சாதனைகளையும் ஒரே நாளில் செய்த வீரர் ஆனந்தன் மட்டுமே.


### கின்னஸ் புத்தகத்தில் பதியப்படாத ஏனைய சாதனைகள்

- ✦ இடைவிடாத டுவிஸ்ட் நடனம்- டிசெம்பர் 1978 (128 மணித்தியாலங்கள் 5.3 நாட்கள்)
- ✦ இடைவிடாது நடத்தல்- 1981 149 மணித்தியாலங்கள்- 6.2 நாட்கள்)
- ✦ ஸ்பிரிங் இழுத்தல்- டிசெம்பர் 1982 (38 தடவைகள் ஒரு நிமிடத்திற்குள்)

(வல்லை ஜெயம்)

# உலகப் பொலிசின் உள்ளூர் கொலைகள்!

வோஷிங்டன் மாநிலத்தைச் சேர்ந்த பாஸ்கோ நகரில் கற்களை ஆயுதமாக ஏந்திய ஒருவரை மட்டும் 17 குண்டுகளால்சுட்டு உடலை சல்லடையாக்கிக் கொன்றனர் அமெரிக்க பொலீசார்.





2015, ஜுன் 9 அன்று கார்டியன் பத்திரிக்கை ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டிருந்தது. அதில் இங்கிலாந்து, ஐஸ்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளின் பொலீசோடு அமெரிக்க பொலீசை ஒப்பிட்டிருந்தது. அதன்படி அந்நாடுகளின் பொலீஸ் சில பத்தாண்டுகளில் சுட்டுக் கொல்வதை அமெரிக்க பொலீசு ஒரு நாளிலே செய்துவிடுகிறது.

2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முதல் 24 நாட்களில் மட்டும் அமெரிக்க மக்கள் மீது அமெரிக்க பொலீஸ் 59 முறை அபாயகரமாக சுட்டிருப்பதாக கூறுகிறது அந்தப் பட்டியல். ஆனால் இங்கிலாந்து பொலீஸ் 1990-2014 வரையிலான 24 ஆண்டுகளில்தான் 55 தடவை அச்செயலை செய்திருப்பதாக கூறுகிறது.

ஆஸ்திரேலிய பொலீஸ் 1992 முதல் 2011 வரையிலான 20 ஆண்டுகளில் 94 பேரை சுட்டுக் கொன்றிருக்கும் நிலையில் அமெரிக்க பொலீஸ் 2015 மார்ச் மாதத்தில் மட்டும் 97 பேரை சுட்டுக் கொன்றிருக்கிறது.

ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களிலேயே ஆஸ்திரேலிய பொலீஸ் 20 ஆண்டுகளில் கொன்றதை விட எண்ணிக்கையில் மிக அதிகமாக கொல்கிறது அமெரிக்க பொலீஸ்!

கனடா (மக்கள் தொகை 3.5 கோடி) பொலீஸ் ஒரு ஆண்டில் சுட்டுக் கொல்லும் மக்களின் எண்ணிக்கை 25. அமெரிக்க மாநிலமான கலிபோர்னியாவில் (மக்கள் தொகை 3.8 கோடி) மட்டும் பொலீஸ் 2015-ன் முதல் 6 மாதங்களில் மட்டும் 72 பேரை சுட்டுக் கொன்றுள்ளது




அமெரிக்க பொலீசின் காட்டுமிராண்டிதனத்தை இன்னும் நெருங்கி பார்ப்பதற்காக, மக்கள்தொகை ஏறக்குறைய ஒரே அளவில் இருக்கும் கலிபோர்னியாவை சேர்ந்த ஸ்டாக்டன் நகரத்தையும் ஐஸ்லாந்து தீவையும் கார்டியன் ஆய்வு ஒப்பிடுகிறது.

ஸ்டாக்டன் நகரின் மக்கள்தொகை 2.9 லட்சம், ஐஸ்லாந்தின் மக்கள்தொகை 3.2 லட்சம். ஐஸ்லாந்து 1944 இல் விடுதலையான பிறகு, ஏறக்குறைய 71 ஆண்டுகளுக்குப் பிறகு 2013 இல் மனநலம் குன்றிய நோயாளி ஒருவரை அந்நாட்டு பொலீஸ் சுட்டுக் கொன்றது. இதுதான் 71 ஆண்டுகளில் ஐஸ்லாந்து பொலீஸ் செய்த முதல் கொலையாகும். மாறாக ஸ்டாக்டன் நகர பொலீசார் இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் மட்டும் 3 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

அமெரிக்க பொலிசின் இதுபோன்ற படுகொலைகள் ஒருபுறமிருக்க மறுபுறம் அதன நிறவெறி உலகம் முழுதும் கடுமையான கண்டனங்களை சந்தித்துள்ளது. புள்ளி விவரங்களின் அடிப்படையில் அமெரிக்க பொலீஸ் வெள்ளையின மக்களை விட அதிகமாக கறுப்பின மக்களை படுகொலை செய்துள்ளது. 10 லட்சம் பேரில் சுட்டுக் கொல்லப்படும் கருப்பினத்தை சேர்ந்தவர்கள் எண்ணிக்கை 3.66, சுட்டுக் கொல்லப்படும் வெள்ளையினத்தவர் எண்ணிக்கை 0.9 ஆகும்.

பொலீசால் கொல்லப்படுதல் கார்டியன் பத்திரிக்கை செய்த இன்னொரு ஒப்பீட்டில் அமெரிக்க பொலீசின் நிறவெறி அப்பட்டமாக அம்பலமாகியுள்ளது.

ஜேர்மனி பொலீஸ் எந்த இனத்தையும் சேர்ந்த ஆயுதம் ஏந்திய அல்லது ஆயுதமற்ற 15 பேரை 2010-2011 இலிருந்து 2 ஆண்டுகளில் சுட்டுக் கொன்றுள்ளது. மாறாக, அமெரிக்க பொலீஸ் 2015 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் நிராயுதபாணியான 19 கறுப்பின மக்களை சுட்டுக் கொன்றுள்ளது.

மிசௌரி மாகாணத்தில் நிராயுதபாணியான கறுப்பின இளைஞனான மைக்கேல் பிரௌனை நிறவெறியால் படுகொலை செய்த வெள்ளையின பொலீஸ் அதிகாரியை விடுவித்த அமெரிக்க நீதிமன்றத்தின் செயலுக்கு எதிராக அந்த மாகாணமே கொதித்தெழுந்தது.


ஏனைய நாடுகளின் மக்களை விட அதிக அளவில் அமெரிக்க மக்கள் அதன் பொலீசால் சுட்டுக் கொல்லப்படுவதைப் பற்றியும், கறுப்பின மக்கள் அதிகமாக கொல்லப்படுவதற்கு காரணமான நிறவெறி குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கூட அமெரிக்காவை கேட்கும் அளவிற்கு அமெரிக்க பொலீசின் யோக்கியதை சந்தி சிரித்தது. இவ்வளவிற்கும் ஐ.நா.சபைதான் ஈராக், ஆப்கான் ஆக்கிரமிப்பு போர்களுக்கு லைசன்ஸ் கொடுத்த புண்ணியவான். அந்த அளவுக்கு நிறவெறியை மறைக்க முடியவில்லை போலும்.

கடைசியாக பொது மக் கள் மீது பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளை கணக்கில் எடுத்துக் கொண்டு பின்லாந்து நாட்டு பொலீசு டன் செய்த ஒரு ஒப்பீட்டைப் பார்ப்போம். 2013 இல் பின்லாந்து பொலிஸ் 6 குண்டுகளை மட்டுமே மக் கள் மீது பிரயோகித்தது. ஆனால் வோஷிங்டன் மாநிலத்தை சேர்ந்த பாஸ்கோ நகரில் கற்களை ஆயுதமாக ஏந்திய ஒருவரை மட்டும் 17 குண்டுகளால் சுட்டு உடலை சல்லடையாக்கி கொனறனர் அமெரிக்க பொலீசார்.

அமெரிக்க உள்நாட்டு புலனாய்வு நிறுவனமான எஃப்.பி.ஐ வெளியிட்ட தகவலின் படி, 2012 இல் மட்டும் 410 பேர் அமெரிக்க பொலீசால் கொல்லப்பட்டனர். அதில் 409 பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க பொலீஸ் அதன் சொந்த மக்களை சுட்டுக் கொல்வது, இனவெறியோடு கறுப்பின மக்களை குறி வைப்பது ஒருபுறம். மறுபுறம் பள்ளிக்கூடங்கள், பொது இடங்களில் அமெரிக்கர்கள் சிலரே பொது மக்களை சுட்டுக் கொல்கின்றனர். அமெரிக்க சொர்க்கத்தின் யோக்கியதையை கார்டியனின் புள்ளி விவரங்கள் பறை சாற்றுகின்றன.

**-இணையம்-**





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-204**

...கட்டையனக் கைத்தாங்கலாக் கூட்டிட்டு வந்துட்டா குடிசைக்கு.

தீபத்துல கொறவச்ச திரியத் திருகிவிட்டா. சுக்குத் தண்ணி வச்சுக்குடுத்தா; இத்த சீலைய ஓரங்கிழிச்சு ஊத்த ஒடம்பத் தொடச்சுவிட்டா.

கோரப்பாய ஒதறிவிரிச்சா; தலகாணி போட்டா ; கட்டையனப் படுக்கவச்சா.

செத்தவடத்துல அழுத கண்ணோட ஒறங்கிப்போனான் கட்டையன்.

அடிச்சட்டியில தானியம் ஏதாச்சும் கெடக்குமான்னு அடுக்குப் பானைகள அவ ஒண்ணொன்ணா எறக்கிக் கவுத்துக் கவுத்துப் பாத்தா ஒரு குண்டுமணித் தானியம்கூட இல்ல.

கஞ்சியில்லாமக் கெடக்கிறவனக்குக் களிக்கிண்டியாச்சும் போடணுமே! பளிச்சின்னு கண்ணுல ஒரு பொறி தட்டுச்சு கருவாச்சிக்கு.

கட்டையன் தலையத் தூக்கிப் பழைய சீலயச் சுருட்டி அணவுடிப் பொடச்சுப்பொடச்சு முக்காப்படி கேப்பை எடுத்துப்புட்டா. அதைத் திருகையில போட்டுத் திரிக்கப்போற



குடுத்துக்கிட்டே, தலகாணிய உருவுனா, தலகாணிய அருமாமணைய வச்சுக் கரகரகரன்னு அறுத்தா.

உள்ள அடைச்சுவச்சிருந்த கேப்பும் பொட்டு முழுசையும் சட்டியில கொட்டப்ப...

குடிசைக் கூரைமே படபடபடன்னு என்னமோ சத்தம் கேட்டுச்சு.

யாத்தே மழையா! ஏழு வருசத்துக் கப்புறம் மழையா?

ஒரு தூத்த ரெண்டு தூத்தலா விழுந்த மழை இப்ப லேசா ஒறைக்க ஆரம்பிச்சிருச்சு.

படலத் தொறந்து வெளிய வந்து பாத்தா- சடசடசன்னு சவட்டுது மழை.

கைய வெளிய நீட்டுனா. பிசுபிசுபிசுன்னு பசை ஒட்டியிருந்த கையக் கழுவுனா மழையில.

ஒத்த மழை அவ நெத்தியில விழுந்ததுல உசுர்குளுந்து போனா.

ஓட்ட ஓட்டமா ஓடிச் சட்டிபானையெல்லாம் தூக்கி வெட்ட வெளியில வச்சா.


வந்திருச்சே! வராத மழை வந்திருச்சே!

தப்பியும் வரலாம். தள்ளியும் வரலாம். ஆனா- எப்பவும் மழை இல்லேன்னு போயிராது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்



# சர்வதேச விசாரணையை முடக்க ஐ.நாவிலும் சிலர் சதித்திட்டம்

## அனந்தி அதிர்ச்சித் தகவல்

**ஐ.நா. சபைக்கு உள்ளேயே அதன் செயலாளர் பான் கீமூனின் அலுவலகத்துக்கு உள்ளே இருந்து கொண்டு சில சக்திகள் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை என்ற எமது கோரிக்கையை முடக்கி ஒரு உள்ளக விசாரணையை நடத்தி விட வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன்.**



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உண்மையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும், வடமாகாண சபை சார்பாகவும் முதன் முதலில் ஐ.நா.மனித உரிமை சபையில் நேரடியாக இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை நான் கோரும் வரை வேறு எந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினரோ, மாகாணசபை உறுப்பினரோ அங்கு கலந்து கொண்டு அதைக் கோரியிருக்கவில்லை.

இன அழிப்புப் போரின் தாக்கத்தை நேரடியாகத் தரிசித்தவள் என்ற வகையில் என்னோடு சர்வதேச பிரநிதிகள் பலரும் நேரடியாக மனம் திறந்து பேசும் வாய்ப்புக்கள் உருவாகின.

மாகாண சபையில் இன அழிப்பு குறித்த சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அடிகோலுபவர்களாக மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கமும் என்னையும் போன்ற சில உறுப்பினர்கள் தொடர்ச்சியாக உழைத்தோம். எமது உழைப்பிற்கு மேலாக எதிர்பாராத பலனாக முதலமைச்சர் விக்கினேஸ்வரன் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நிறைவேற்றிய தீர்மானம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால், சர்வதேச சக்திகளுக்கு நாம் தெளிவாக அந்த விடயத்தை எடுத்துச் சொல்லி விட்டோம்.

இதேவேளை எமது மக்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்று சர்வதேச சக்திகளிடையேயும் குழப்பமான நிலை இருக்கிறது. ஐ.நா.சபைக்கு உள்ளேயே அதன் செயலாளர் பான் கீமூனின் அலுவலகத்துக்கு உள்ளே இருந்து கொண்டே சில சக்திகள் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை என்ற எமது கோரிக்கையை முடக்கி ஒரு உள்ளக விசாரணையை இலங்கைக்கு உள்ளேயே நடத்திவிட வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான இன்றைய சூழலில் எமது குரலாக, எமது கோரிக்கையாக எது ஒலிக்க வேண்டும், யார் தெரிவாக வேண்டும் என்பது முக்கியமாகிறது.

அதேபோல எமக்குள் இருந்து எந்தக் குரல், எந்தக் கோரிக்கை ஒலிக்கக்கூடாது என்பதும் முக்கியமாகிறது.

இலங்கைப் பாராளுமன்றின் கதிரைகளை யார் நிரப்பினாலும் பரவாயில்லை ஆனால், தற்போதைய சூழலில் சர்வதேச விசாரணையை சில சிக்கலான சக்திகளுடன் சேர்ந்து ஒத்துழைத்து குழிதோண்டிப் புதைப்பவர்களை மக்கள் ஆணை பெற்றவர்களாகத் தயவுசெய்து தேர்ந்தெடுக்க வேண்டாம். இறுதியாக நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளிருந்தவாறே பங்குபற்ற விரும்பினேன். இதற்கான காரணம் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை மேலும் பலப்படுத்துவதற்காகச் செயற்பட வேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காகவே.

பல இன்னல்களையும் சவால்களையும் சந்தித்து இன அழிப்புப் போருக்கு ஊடாக தமது வாழ்வைத் தொடரும் எமது உறவுகளுக்கு தன்மானத்துடனான, நீதியான வாழ்வையும் உரிமையையும் பெற்றுக்கொடுப்பதற்கு தொடர்ந்தும் உழைக்க வேண்டும் என்பதும் எனது நோக்கமாக இருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## இளைஞர்களை பொருளாதார ரீதியாக வளப்படுத்தி தேசியத்தை அடைவோம்

### அங்கஜன் அழைப்பு



இளைஞர்களை பொருளாதார ரீதியாக வளப்படுத்தி அவர்களூடாக எமது தேசியத்தை அடைவதே எமது நோக்கம் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் எல்லோருக்கும் தேசிய உரித்து இருக்கின்றது.

ஆனால் தற்போது தேசிய பிரச்சினை மட்டும் எமக்கு பிரச்சினை இல்லை. சமூக பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவற்றை தீர்ப்பதற்கு புதிய நல்ல படித்தவர்கள் நாடாளுமன்றத்திற்கு செல்ல வேண்டும்.

மக்கள் என்னை தெரிவு செய்வார்கள் என்பது உறுதியாகிவிட்டது.

தற்போது மக்களின் பிரச்சினைகளை எந்தெந்த முறையில் நிவர்த்தி செய்யவேண்டும் என்பது பற்றிய திட்டமிடல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளேன்.

அரசுடன் இருப்பவர்கள் துரோகிகள் என்று கூறியவர்கள் தான் தற்போது அரசுடன் இருக்கின்றார்கள்.

3 அரசியல் கட்டமைப்பை தம்வசம் வைத்திருந்தவர்கள் இதுவரை காலமும் மக்களுக்காக என்ன செய்தார்கள்.


வெளிநாடுகளுக்கு எம்மக்கள் அரசியல் அகதிகளாக சென்றார்கள். தற்போது பொருளாதார அகதிகளாக செல்கின்றார்கள். இளைஞர்களுக்குரிய வேலைவாய்ப்புகள் இங்கு கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் தம் உறவினர்களுடனேயே எம் மண்ணில் இருப்பார்கள்.

இளைஞர்களுக்குரிய வேலைவாய்ப்புக்களை 2010 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 9 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்படுத்திக் கொடுக்க மறந்துவிட்டார்கள். இதன் காரணமாகவே எமது இளைஞர்கள் எம் நாட்டை விட்டு அகதிகளாக வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள்.

பொருளாதார ரீதியில் பின்னடைந்த நிலையில் எம் மக்கள் உள்ளார்கள். இளைஞர்களின் எதிர்காலத்திற்கு வழியை அமைத்து கொடுத்து எமது சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்பது எனது நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## தீவகப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தில் மாற்றம் ஏற்படுத்த வாக்களிக்க வேண்டும்

### செல்வவடிவேல் தெரிவிப்பு



தீவுப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தில் புதிய மாற்றம் இந்நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக ஏற்பட வேண்டும். தீவக மக்களின் அபிவிருத்தி உயர்த்தப்படவேண்டும் என்ற நோக்கம் எப்பொழுதும் எம்மிடம் உண்டு என்கிறார் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சொல்லின் செல்வர் இரா செல்வவடிவேல்.

மண்கும்பான் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்த தீவகமக்கள் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர்.

கடந்த வடமாகாண சபைத் தேர்தலில் மிகவும் நம்பிக்கையுடன் வாக்களித்த தீவக மக்களுக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு துரோகத்தை இழைத்து விட்டது.

தீவக அபிவிருத்திக்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசிடம் இருந்து பெற்ற பல கோடி பணத்தினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மடக்கி விட்டனர்.

வடமாகாண சபையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய தீவக மக்கள் மிகவும் ஏமாந்த நிலையில் உள்ளதை நாம் அறிந்துள்ளோம். அம்மக்களது நம்பிக்கை வீணாகி விட்டது மில்லாது அவர்களது தேவைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் அம்மக்களது வாக்குகளது ஏமாற்றப்படக்கூடாது. சேவை செய்யக் கூடியவர்களுக்கே அவர்களது வாக்குகள் கிடைக் கப்பட வேண்டும்

அம் மக்களைத் தோற்கடித்து ஏமாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இந்நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்படவுள்ளனர்.

தீவகப்பகுதி மக்களுடைய அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி ஊடாக மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கமைய வேலணை, நெடுந்தீவு ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊடாக இம் மக்களது அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டன.

தோற்றுப்போன இம் மக்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும். அதற்கு என்றுமே எமது வீணைச்சின்னம் உதவிக்கரம் நீட்டும் உங்களைத் தோற்கடித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நீங்கள் தோற்கடிக்க வேண்டும். நீங்கள் தோற்றுப் போனதை அறிந்த நாம் மிகவும் வேதனையடைகிறோம்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்களே உண்மையான வெற்றியாளர்கள் என்பதை உணர்ந்து கொள்வீர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் இருந்த காலத்தில் ஏன் புதிய நாட்டை உருவாக்கவில்லை



**ரவி கருணாநாயக்க கேள்வி**

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த காலத்தில் ஏன் புதிய நாடு ஒன்றை உருவாக்கவில்லை என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.**

மகிந்த ராஜபக்ஷவினால் 10 ஆண்டுகளில் செய்ய முடியாத மக்கள் சேவையை நாம் 100 நாட்களில் செய்துள்ளோம்.

தற்போது புதிய நாட்டை உருவாக்கப் போவதாகவும், சந்தர்ப்பம் வழங்குமாறும் மகிந்த கோரி வருகின்றார்.

ஆட்சியில் இருந்த காலத்தில் ஏன் அந்த புதிய நாட்டை உருவாக்கவில்லை.

சுயலாப ஆட்சியே நடத்தப்பட்டது, அப்பாவி மக்களின் குரல்களுக்கு செவி சாய்க்கவில்லை.

இவ்வாறான நபர்கள் மீளவும் ஆட்சிப் பொறுப்பினை கோருவது நகைப்பிற்குரியது.

மகிந்த தரப்பு செல்வந்தர்களாக மாறியது, மக்கள் வறுமையில் வாடினார்கள்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

மக்கள் வாழ்வதற்கு இலகுவான தீர்மானங்களை எடுக்குமாறே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எல்லா சந்தர்ப்பங்களிலும் எமக்கு ஆலோசனை வழங்குகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் ஒரே மாதிரியாகப்படுகின்றது.

கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களின் ஆட்சியை கவனித்தால் இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது, கோல்டன் கீ வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் காணப்பட்டது அதற்கு தீர்வு பெற்றுக் கொடுத்தோம் என ரவி கருணாநாயக்க தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்தவுக்கெதிராக குருநாகலில் சந்திரிகாவும் சோபித தேரரும்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சிவில் சமூக அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபிதவும் குருநாகலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளனர்.

நாளை மறுதினம் 8ஆம் திகதியன்று இவர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் இணைந்து சிறந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற அடிப்படையில் வாக்காளர்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளனர்.

அத்துடன் பல கூட்டங்களையும் அவர்கள் குருநாகலில் நடத்தவுள்ளனர்.

எனினும் இருவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசார மேடையில் ஏறுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர்.


இந்தநிலையில் சந்திரிகா மற்றும் சோபித தேரரின் நடவடிக்கைகளுக்கு மகிந்த ராஜபக்ஷ தரப்பு தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 250 | 200 |
| தக்காளி | 140 | 120 | 100 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 120 | 120 | 160 | 90-200 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 40 |
| புடோல் | 40 | 30 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 80 | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 100 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 20 | 30 | 40 | 50 | 25 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 100 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 150 | 160 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 100 | 120 | 120 | 100 |
| போஞ்சி | 200 | 150 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 60 | — | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 40 | 50 | 80 | 90 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 50 | 25-40 | 50 | 40 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 200 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 160 | 100 | 160 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 454

கஜி கஜிதா




ராகுலன் வேந்தன்





சிவா கணேஸ்




வாசு வாமன்




அன்ரோ அன்ரனி





அபி அபி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னாட்சிக்கும் நீதிக்கும் அழுத்தம் கொடுக்கும் இலங்கைத் தமிழர்கள்!



தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கையான பரந்துபட்ட தன்னாட்சி உரிமை, இலங்கையில் வரும் ஓகஸ்ட் 17 ஆம் நாள் நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கியமான விவகாரமாக இருக்கும்.

இவ்வாறு, ஏஎவ்பி செய்தி நிறுவனத்தக்காக எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் அமால் ஜெயசிங்க.

வீதித்தடைகளும், இராணுவ சோதனைச் சாவடிகளும் காணாமற் போய்விட்டன. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அந்தப் பகுதிக்கு பயணம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டுவிட்டன.

ஆனால், இலங்கையின் வடக்கில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் பெரும்பாலான தமிழர்கள், நீண்ட உள்நாட்டுப் போரின் காயங்களை ஆற்றுவதற்கு இன்னும் அதிகமாக செய்யப்பட வேண்டியுள்ளதாக கூறுகிறார்கள். வரும் நாடாளுமன்றத் தேர்தல் தமக்கு பயனளிக்கும் என்று நம்புகிறார்கள்.

அந்தப் பிராந்தியத்தில் இராணுவச் சட்டங்களைக் நடைமுறைப்படுத்தி வந்த, பலம் வாய்ந்த ஆட்சியாளராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக கடந்த ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் வாக்களித்திருந்தனர்.

அவரையடுத்து பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்தின் தெருக்களில் இருந்து கணிசமான படையினரைக் குறைத்து, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், இராஜதந்திரிகள், ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளார்.

ஆனால், தமிழர்களுக்கும் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் இடையில், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதான தனது தேர்தல் வாக்குறுதியை, இன்னமும் நிறைவேற்றவில்லை என்கின்றனர் உள்ளூர் மக்கள்.

இலங்கை அரசாங்கம் எப்போது எமக்கு சமஷ்டிக் கட்டமைப்புக்குள் தன்னாட்சி உரிமையை வழங்குகிறதோ அப்போது தான், நாம் சமரசம் செய்து கொள்ள முடியும் என்று, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

"தன்னாட்சி உரிமை வழங்கப்படும் போது எமது 90 வீதமான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்." என்கிறார் அவர்.

தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கையான, பரந்துபட்ட தன்னாட்சி உரிமை வரும் ஓகஸ்ட் 17 ஆம் நாள் நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கியமான விவகாரமாக இருக்கும்.

ஆயுதமோதல்கள் முடிந்து, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்ட போதும், அதற்கு சட்டமன்ற அதிகாரங்கள் குறைவாகவே உள்ளன.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளலாம் என்று தமிழர்கள் நம்புவதாக குறிப்பிடுகிறார், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

"அடுத்த நாடாளுமன்றத்தில் எமது செல்வாக்கு அதிகமாக இருக்கும் என்று நம்புகிறோம். அதன் மூலம், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாங்கள் அழுத்தம் கொடுக்க முடியும்" என ஏஎவ்பியிடம் குறிப்பிட்டார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

"இலங்கை அரசாங்கத்துக்கு மக்கள் ஒரு செய்தியை சொல்வதற்கு இந்த தேர்தல் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது." என்கிறார் அவர்.

கொழும்புக்கு வடக்கே 400 கி.ம தொலைவில் உள்ள யாழ்ப்பாணத்தில், குண்டுகள் போடப்பட்ட ஆயிரக்கணக்கான வீடுகளும், ஆயுத மோதல்கள் முடிந்து ஆறு ஆண்டுகளின் பின்னரும், இன்னமும் முகாம்களில் வாழும் பல மக்களும் இருக்கின்றனர்.

கடந்த ஜனவரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்த பின்னர், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு, உறுதியான நடவடிக்கைகள் இன்னமும் எடுக்கப்படவில்லை என்கிறார் சிவஞானம்.

ஆனால், அந்தப் பிரதேசத்தில் இருந்து வந்த அச்சமான சூழ்நிலை மறைந்துவிட்டதுடன், குடும்பத்தினர் தமது நண்பர்களை தங்க வைத்திருக்கும் போது, புலனாய்வாளர்கள் வீடுகளுக்குச் செல்வதும் நின்றுவிட்டது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், தமிழ் மக்கள் மெதுவாக மூச்சு விடத் தொடங்கியுள்ளனர் என, ஏஎவ்பியிடம் குறிப்பிட்டார் உள்ளூர் வர்த்தக சம்மேளனத் தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

"இப்போது அங்கு அச்சமான சூழல் இல்லை. முன்னர், கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தினால், நாம் எவருடனும் பேசுவதில்லை." என்கிறார் அவர்.

பொதுமக்களின் வாழ்வில் இராணுவத் தலையீடுகள் நாளுக்கு நாள் குறைந்து வருவதாக குறிப்பிட்டார் பிரதேசத்தின் உயர் அரச நிர்வாக அதிகாரியான, நாகலிங்கம் வேதநாயகன்.

"நாங்கள் இப்போது, இராணுவத்துடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதில்லை, காவல்துறையினருடனேயே தொடர்புகளைக் கொண்டுள்ளோம்" என்கிறார் அவர்.

**நீதிக்கான கோரிக்கை**

2009 இல் முடிவடைந்த 37 ஆண்டுகால கரந்தடிப் போரின் இறுதிக் கட்டங்களில், அரச படைகளால் கொல்லப்பட்டதாக ஐ.நா கூறும் 40 ஆயிரம் தமிழர்களுக்கு நீதி கோருவதற்கு அங்குள்ள மக்களுக்கு கிடைத்துள்ள புதிய சுதந்திரங்கள் ஊக்கமளிக்கின்றன.

இலங்கையன் சிறுபான்மைத் தமிழர்களுக்கு முழுமையான சுதந்திரம் கோரி, போரிட்ட தமிழ்ப் புலிகள் இடைவிடாமல் தொடரப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம், முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான படையினரும் கொல்லப்பட்டதுடன், காயமடைந்தனர்.

தனது தலைமையின் கீழ் இருந்த- பெருமளவில் சிங்களவர்க்களைக் கொண்ட இராணுவம், எந்தவொரு பொதுமகனையும் கொல்லவில்லை என்று மகிந்த ராஜபக்ச எப்போதும் கூறிவந்தார்.

அத்துடன், குற்றச்சாட்டுகள் தொடர்பாக, ஐ.நாவின் ஆணை பெற்ற விசாரணைகளுக்கும் அவர ஒத்துழைக்க மறுத்தார்.

கடந்த ஜனவரி மாதம் நடந்த தேர்தலில் தமிழர்களின் பெரும் ஆதரவுடன் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, விசாரணைகளை மேற்கொள்வதற்கு நம்பகமான உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்கி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

சில மாதங்களுக்குள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ளதாகவும், இது அவர் இந்தப் பிரதேசத்துக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுவதாகவும், உளளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், சுதந்திரமான அனைத்துலக நிபுணர்கள் உள்ளடக்கப்படாத, உள்நாட்டு விசாரணையை உருவாக்குவாரேயானால், மகிந்த ராஜபக்சவை விட, சிறிசேன மேன்மையானவர் என்று கூற முடியாது எனத் தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

"போர்க்குற்றங்களை இழைத்த குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்." என்று ஏஎவ்பியிடம், யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து கூறினார் சிவஞானம்.

"இந்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க, உள்நாட்டு முறைகளின் மீது எமக்கு நம்பிக்கை வைக்க முடியாது." என்கிறார் அவர்.

வெளிநாட்டு விசாரணையாளர்களை அழைப்பது, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதாக அமையும் என்றும், தேசிய இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சிங்களத் தேசியவாதிகள் பார்க்கின்றனர்.

வரும் செப்ரெம்பரில், அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள, ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணையாளர்களுக்கு ராஜபக்ச அரசாங்கம், நுழைவிசைவு கூட வழங்கவில்லை.

தமிழர்களால் உள்நாட்டு விசாரணையை நம்பமுடியாது. நம்பகமான வெளிநாட்டு விசாரணையே வேண்டும் என்கிறார், 2009இல், படையினரினரிடம் சரணடைந்து இன்னமும் காணாமற்போயுள்ள தமிழ்ப் புலியின் மனைவியாகிய, வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன்.

அரசாங்கம் நீதியை உறுதிப்படுத்த தவறினால், நான் நீதியைத் தேடி ஐ.நாவுக்குச் செல்வேன் அல்லது ஏதாவது ஒரு அனைத்துலக அமைப்பிடம் செல்வேன்" என்று அவர் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள தனது வீட்டில் இருந்து ஏஎவ்பியிடம் குறிப்பிட்டார்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்த ராஜபக்ஷவின் அரசியலில்

# இனவாதம், மதவாதம் தாண்டவமாடுகின்றது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் குற்றச்சாட்டு


(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ சொல்வதை மறந்து விடும் ஒருவகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் ஆறு மாதங்களுக்கு முன் அவர் கூறிய சகலவற்றையும் மறந்து அவர் செயற்படுவது நன்கு தெளிவாகத் தெரிவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசியலில் இனவாதம் கோஷமாகி மதவாதம் தாண்டவமாடுகின்றது எனவும் தெரிவித்தார்.

தேசியக் கொடியை திரிவுபடுத்த செயற்பட்ட அவர், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தை பரப்பவும் முயற்சித்துள்ளார்.

புலிகளுடன் அவர் கட்டி எழுப்பிய நட்புறவையும் அவர் மறந்து உள்ளார். 800 மில்லியன் ரூபாவை ராடா நிறுவனம் ஊடாக நேரடியாக



பிரபாகரனின் கைகளில் வழங்கியவரும் மகிந்தவே.

இதனால் பிரபாகரனின் ஆசிகளுடன் 2005 ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றி ஈட்டினார்.

அந்த வகையில் பிக்குமார் படுகொலை மற்றும் 600 பொலிஸாரின் வாழ்வை ஒழித்த கருணா அம்மான் என்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு ஸ்ரீல. கட்சியில் உப தலைவர் பதவி வழங்கியவரும் மகிந்தவே. பிள்ளையானுக்கு கிழக்கின் முதலமைச்சர் பதவியையும் மகிந்தவே வழங்கினார். இவை எல்லாம் "எம்நீசியா" என்ற நோய் ஏற்பட்டுள்ள மகிந்தவுக்கு மறந்து விட்டது.

மகிந்த ராஜபக்ஷவும் அவரின் இனவாதக் குழுவின் குறுகிய அரசியல் காரணங்களுக்காக நாடடை தீ மூட்டுவதை உடன் நிறுத்த வேண்டும். இனவாதமே மகிந்த வின் சகல தேர்தல் போராட்டங்களிலும் கோஷமாக அமைந்தது. ஜனவரி எட்டாம் திகதி மக்கள் இந்தக் கோஷத்தையே நிராகரித்தனர். தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கும் இக்கூட்டத்தில் நாட்டு மக்களை நன்கு விழிப்பதற்கான போராட்ட கோஷத்தை கண்டு பிடிக்க இடமுண்டு.

இவ்வாறு பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.நாவின் நிதி அரசின் ஊடாகவே வடமாகாணத்திற்கு வழங்கப்படும்

## வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையினால் வடமாகாண சபைக்கு மீள்குடியேற்ற மக்களுக்கான நிதியுதவி வழங்கப்படும்போது அது மத்திய அரசாங்கத்தின் ஊடாகவே வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**



வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கோரிக்கைக்கு இணங்க, வடமாகாண சபைக்கு தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை வழங்கவுள்ளதாக அண்மையில் ஐக்கிய நாடுகளின் சபை செயலாளரின் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

எனினும் இது இலங்கையின் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாகவே வழங்கப்படும் என்று கொலன்னே மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயர்தர மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள்

பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை உயர்தரப் பரீட்சைக்கு இடையூறு ஏற்படாத வகையில் முன்னெடுக்குமாறு தேர்தல்கள் செயலகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணையாளர் இது தொடர்பிலான ஆலோசனைகளை வழங்கியதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் பிரசாரப் பணிகளால் அசௌகரியம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பரீட்சார்த்திகள், பரீட்சை நிலையங்களின் பொறுப்பதிகாரிகளிடம் முறையிட வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது

இதேவேளை, உயர் தரப் பரீட்சைக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுக்குமாறு தேர்தல் கண்காணிப்பாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# ஆறு வருடங்களின் பின்னர் கோல்டன் கீ வழக்கு நிறைவு

(கொழும்பு)

கோல்டன் கீ நிறுவனத்துக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினத்துடன் நிறைவுக்கு வந்துள்ளது.

வைப்பீட்டாளர்களது பணத்தில் 41 வீதத்தினை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதால் இவ் வழக்கை நிறைவுக்கு கொண்டு வந்ததாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வைப்பீட்டாளர்கள் இதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் உச்ச நீதிமன்றம் மேலும் அறிவித்துள்ளது.

உச்சநீதிமன்றில் இவ்வழக்கு தொடரப்பட்டு சுமார் 06 வருடகாலம் ஆகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் தெய்வமாகலாம்

ஆசை சுயநலமானது. அது தன்னை, தன் மகிழ்ச்சியை முக்கியமாக நினைக்கும் மற்றவரைப் பற்றிய கவலையே அதற்குக் கிடையாது. ஒருபெண் மீது ஆசை வைத்த ஆண்கள் அவளை அடையவேண்டும் என்று விரும்புவார்களே ஒழிய அவளது விருப்பம், எண்ணம், வெறுப்பு இவற்றைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். ஆசையுள்ளவர்கள் தன் செயல் பிறரை எப்படிப் பாதிக்கும் என்று யோசிக்கமாட்டார்கள். மற்றவர்களைக் கஷ்டப்படுத்தியாவது தான் சந்தோசமாக இருப்பார்கள்.

குற்றாலத்தில் குளிக்கப்போகிற ஒருத்தர் குழந்தை அழாமல் இருப்பதற்காக வாழைப்பழம் வாங்கிக் குழந்தையிடம் கொடுத்து கரையோரமாக உட்கார வைத்து விட்டு குளிக்கப் போகிறார். நமது மூதாதையர் ஸ்ரீமான் குரங்கு *கர்* என்று பல்லைக்காட்டி குழந்தை முன் வந்து வெடுக்கென்று பழத்தைப் பிடுங்கிப் போகிறது. குழந்தை கூச்சல் போடுகிறது. குரங்கு தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டது. அது குழந்தையைப் பாதிக்குமே என்று கவலைப்படாது. ஆசை விலங்குத்தனமானது.

அன்புள்ளவர்கள் மனிதர்கள். பிறர் உணர்ச்சிகளை மதிப்பார்கள், உதவுவார்கள் பிறர் அழுதால் தாமும் அழுவார்கள். ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்றால் ஓடிப்போய்ப் பார்ப்பார்கள். கஞ்சி வைத்துக் கொடுப்பார்கள்.

ஆனால் அன்பு தான் பிறருக்கு என்ன செய்கிறோமோ அதைப் பிறரும் தனக்குச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கும்.

நாம் சிரித்தால் பக்கத்தில் உள்ளவனும் சிரிக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பு அன்பின் பலவீனம். அப்படி அடுத்தவர் சிரிக்கவில்லை என்றால் அன்புள்ளவர்கள் கோபப்படுவார்கள். அவனுக்கு எவ்வளவு திமிர்! என்று உறவையே முறித்துவிடுவார்கள். எதிர்பார்ப்பு அன்பின் கெட்ட குணம். நான் உன் வீட்டுக்கு எட்டுத் தடவை வந்திருக்கிறேன். நீ என் வீட்டுக்கு ஒரு தடவை கூடவரவேயில்லை என்று நண்பர்கள் சண்டை போடுவது உண்டு.

அன்பு– தான் பிறருக்குச் செய்வது போலவே பிறர் தனக்குச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கும்.

அருள் என்பது பிறரது நன்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட ஓர் உணர்ச்சி. இதனால் தனக்கு என்ன இலாபம்? இவன் நமக்கு என்ன செய்வான்? என்று எதையும் எதிர்பாராது உதவுவது அருள்மனம். காரணம் அற்ற கருணையின் வெளிப்பாடு அருள். சுயநலம் எள்ளளவும் இன்றி தான் கஷ்டப்பட்டாலும் பிறருக்கு உதவுவோம் என்று உதவும் உயர்ந்த மனம் அருள் மனம்.

ஆசை உள்ளவர்கள் விலங்குகள். அன்பு உள்ளவர்கள் மனிதர்கள். அருள் உள்ளவர்கள் தெய்வங்கள். மனிதர்கள் எல்லோரும் கை, கால்,கண், மூக்கு ஆகியவற்றை ஒருவரை வைத்துப் பார்த்தால் மனிதர்களாகவே தோன்றினாலும் மனதில் உள்ள ஆசை விலங்கு ஆக்கும். அன்பு மனிதனாக வைத்திருக்கும். அருள் தெய்வமாகவே உயர்த்திவிடும்.

பிறரைக் கெடுத்தாவது, துன்புறுத்தியாவது தான் மகிழ்ச்சியோடு இருக்க நினைப்பது ஆசையின் இலக்கணம். தானும் நன்றாக இருக்கவேண்டும். அவனும் நன்றாக இருக்கவேண்டும். அதேமாதிரி தானும் கஷ்டப்படக்கூடாது. அவனும் கஷ்டப்படக் கூடாது என்கிற எண்ணம் அன்பின் இலக்கணம். தான் கஷ்டப்பட்டாலும் அவமானப் பட்டாலும் பிறர் துன்பப்படக்கூடாது என்கிற கருணை அருளின் இலக்கணம். உதாரணம் அன்னை திரேசாவைப் போன்ற பெண்கள்.

மனித மனத்தை ஆசை, அன்பு, அருள் என்று மேற்சொன்ன அளவுகோலால் அளந்து பார்ப்போமா? ஒரு நண்பர் வீட்டுக்குப் போயிருக்கிறோம். அவர் வருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். உள்ளே சுடச்சுட வடை போடுகிறார்கள். வாசனை மூக்கைத் துளைக்கிறது. அவர்களோ நமக்குத் தரவேயில்லை. அந்த நேரம் பார்த்து அந்த வீட்டுக்குழந்தை வாசனை வடையுடன் வந்து நம் பக்கத்தில் உட்காருகிறது. ஆசையை அடக்க முடியாமல் அது வேறு பக்கம் வேடிக்கை பார்க்கும் போது டபக் என்று ஒரு வடையை எடுத்து வாயில் போட்டால் நாம் யார்? குற்றாலத்துக் குரங்கு... ஆசையுள்ள விலங்கு.


சிலபேர் எடுக்கமாட்டார்கள். ஆனால் நண்பர் வந்ததும் நமக்கு எப்படியும் கொண்டுவந்து தருவார் என்று எதிர்பார்த்து காத்திருப்பார்கள். அது சிலர் மனோநிலை. ஏன் எதிர்பார்க்கிறோம். நம் வீட்டுக்கு நண்பர் வந்தபோது நாம் சுடச்சுட பஜ்ஜி கொடுத்தோமே! பஜ்ஜி கொடுத்த நமக்கு வடை கொடுப்பது அவரது கடமை. இந்த எதிர்பார்ப்புள்ளவர்கள் சராசரி மனிதர்கள்! அவர்கள் அன்புள்ள மனிதர்கள்.

இதற்கும் அடுத்த நிலை உண்டு. அந்தக் குழந்தை தட்டில் வடையைக் கொண்டு வந்து நம்மிடம் நீட்டி சாப்பிடுங்கள். அம்மா உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார்கள் என்றதும் குழந்தையை மடியில் வைத்துக்கொள்ள வேண்டும். நீ வடை சாப்பிட்டியா? என்று கேட்க வேண்டும். குழந்தை தன் பிஞ்சுக்கையை விரித்து இல்லை அம்மா தரலை... விருந்தாளிக்குக் கொடுத்துட்டு மிச்சம் இருந்தாத்தான் அம்மா தருவா என்று ஒளிவு மறைவின்றி பேசுகிறது. அப்படியா? இதை முதலில் நீ சாப்பிடு என்று வடையைக் குழந்தைக்கு ஊட்டிவிட்டு அது ரசித்து உண்பதைப் பார்த்து மகிழ்கிறார்களே அவர்கள் அருள் மனம் கொண்ட தெய்வங்கள்.

தெய்வத்திற்கு நைவேத்தியம் என்று படையல் போடுகிறோம். தெய்வம் தின்கிறதா? இல்லை. நாம் உண்ணுவதைப் பார்த்துப் பார்த்து அது மகிழ்கிறது. உண்டு மகிழ்வது மனித மனம். ஊட்டி மகிழ்வது தெய்வ குணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் எதிர்காலம் பின்னோக்கித் திரும்புகிறதா?



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றினால், அவர் தனது பழைய அரசியல் முறையைத் தொடர்ந்தும் பின்பற்றுவார். இதனால் நாட்டில் ஜனநாயக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகஸ்ட் 17 இல் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் குருநாகல் மாவட்டத்திற்கான வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

மகிந்த ராஜபக்ச இத்தேர்தலில் வெற்றி பெற்றால் நிச்சயமாக அவர் பிரதமராக அறிவிக்கப்படுவார் என்பதில் மாற்றமில்லை.

இவர் இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் மீண்டும் ஏறினால் இலங்கையின் ஜனநாயக அரசியல் மறுமலர்ச்சி சிக்கலிற்கு உள்ளாகும்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்று, மகிந்த ராஜபக்சவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினராவார்.

ஆனால் சிறிசேன, ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக உள்ளார். இவர் கடந்த ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதி தேர்தல் மூலம் ராஜபக்சவைத் தோற்கடித்து ஜனாதிபதியானார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் கீழ் மகிந்த ராஜபக்சவுக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதானது சிலரை அதிருப்தி கொள்ளச் செய்துள்ளது.

ராஜபக்சவால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல்கள் மற்றும் அதிகாரத்துவ ஆட்சியை இல்லாதொழிப்பதாக சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ள போதிலும், ராஜபக்ச மீண்டும் அரசியலுக்குள் நுழைந்தால் இவர் தனது பழைய அரசியல் முறையைத் தொடர்ந்தும் பின்பற்றுவார்.

இதனால் நாட்டில் ஜனநாயக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாது.

சிறிசேனவைப் பொறுத்தளவில் கட்சியின் கோட்பாடுகள் மற்றும் கட்சியின் ஒற்றுமை என்பது மிகவும் முக்கியமானதாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூடடணிபோன்றவற்றின் உறுப்பினரகள் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளது.

இதனால் சிறிசேனவால் முற்றுமுழுதாக இவற்றைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியவில்லை. சிறிசேனவின் அரசியல் பலவீனமானது நாட்டில் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளது.

குறிப்பாக தேர்தல் சீர்திருத்தங்கள், தகவல் உரிமைச்சட்டம், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் போன்றன இச்சீர்திருத்தத்திற்குள் அடங்கும்.

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தவுள்ளதாக ராஜபக்ச அறிவித்ததன் பின்னர் எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக சிறிசேன நிறுத்தப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல்வேறு கட்சிகள் ஒன்றிணைத்து எதிரணி உருவாக்கப்பட்டது.

சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினராவார். இவர் அதிபர் வேட்பளாராக நிறுத்தப்பட்ட போது ராஜபக்ச பெருமஅதிர்ச்சியடைந்தார்.

இலங்கையின் ஜனாதிபதி சிறிசேன தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

சிறிசேனவின் 100 நாள் வேலைத திட்டத்தின் கீழ் கூறப்பட்ட பல்வேறு விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

இதற்கும் மேலாக, ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பல்வேறு ஊழல்குற்றங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. தவிர, ஐக்கிய தேசியக் கட்சியானது தற்போது ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்கிறது.

முன்னைய தேர்தல்களில் பயனபடுத்தியது போன்று தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் அரச சொத்துக்களைப் பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்ததை விட சில மாதங்களுக்குப் பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

தன்னால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முழுமையாகக் கட்டுப்படுத்தி ராஜபக்சவை ஓரங்கட்ட முடியும் என சிறிசேன எதிர்பார்த்தார். ஆனாலும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதில் சிறிசேன காலந்தாழ்த்தியதானது இவருக்கான எதிர்ப்பு அதிகரிப்பதற்குக் காரணமாகியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து ராஜபக்சவைத் தடுப்பதற்கு சிறிசேன மிகக்குறைந்த அதிகாரத்தையே பயன்படுத்தியதாக நம்பப்படுகிறது.


இவ்வாறானதொரு சூழலில் ராஜபக்ச மீண்டும் அரசியலில் நுழைந்துள்ளதானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருசாராருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிளவானது ஐக்கிய தேசியக் கட்சி இத்தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதேபோன்றே அண்மையில் இடம்பெற்ற ஜனதிபதித் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பாரியதொரு எதிரணி உருவாக்கப்பட்டது.

எனினும், ஜூலை 14 அன்று, சிறிசேன ஆற்றிய உரையொன்றில், ராஜபக்சவின் நியமனத்தைத் தான் எதிர்ப்பதாகவும், இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால் ராஜபக்ச பிரதமராக அறிவிக்கப்படமாட்டார் எனவும் குறிப்பிட்டடிருந்தார்.

சிறிசேனவின் இந்த உரையானது வாக்காளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவானது ஆகஸ்ட் 17 அன்று இடம்பெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணிக்கு ஏதோவொரு விதத்தில் நன்மையளிக்க வேண்டும். இல்லாவிட்டால், ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணியின் ஊடாக ராஜபக்ச மீண்டும் தலைதூக்குவதானது நாட்டிற்கு பல்வேறு தீமையையே உருவாக்கும்.



சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதானது பல்வேறு சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தியது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிரணியின் பலத்துடன் சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானாலும் கூட, நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆசனங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வசமே இருந்தது.

அடுத்த கட்டமாக இலங்கையில் நல்லாட்சி நிலைநிறுத்தப்பட்டு, ஆழமான ஜனநாயக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவை நவீன அரசியல் சீர்திருத்தங்களின் ஊடாகவே மேற்கொள்ளப்பட முடியும்.

மீளிணக்கப்பாடு, அதிகாரப் பரவலாக்கல், போர்க்கால குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறல் போன்றன உடனடியாக வெற்றியளிக்கும் விவகாரங்கள் அல்ல.

எனினும், ராஜபக்ச மூன்றாவது தடவையாகவும் இல ங்கையின ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், இவர் தனது அதிகாரத்துவ ஆட்சியைத் தொடர்ந்தும் பலப்படுத்தியிருப்பார்.

அரசியல் யாப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமானது மீளவும் ஜனாதிபதி பதவிக்காலத்தை வரையறுக்கிறது. அத்துடன் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழித்து ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துகிறது. இது ஒரு சாதகமான நகர்வாகும்.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்சவைத் தோற்கடித்ததன் மூலம், பெரும்பாலான இலங்கையர்கள் ஊழல் மற்றும் அதிகாரத்துவ ஆட்சி போன்றன தொடர்வதற்கு விரும்பவில்லை. இதேபோன்று வருகின்ற தேர்தலிலும் மக்கள் தமது ஆணையை வழங்குவார்கள் என நம்பப்படுகிறது.

நாட்டில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்ததன் மூலம் ராஜபக்ச, நாட்டின் சிங்கள பௌத்த தேசியவாதிகள் மத்தியில் மிக முக்கிய அரசியல் ஆயுதமாக நோக்கப்படுகிறார்.

போரின் போது இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை வரும் செப்ரெம்பரில் வெளியிடப்படவுள்ள நிலையில் இதனை தனது தேர்தல் பரப்புரையின் போது ராஜபக்ச பயன்படுத்தலாம்.

அடுத்த சில மாதங்களில் இலங்கைத் தீவின் உள்ளக அரசியலில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. இதேபோன்று அனைத்துலக சமூகத்துடனான கொழும்பின் உறவுநிலையிலும் மாற்றம் ஏற்படவுள்ளது.

தேர்தல் காலத்தில் நடுநிலை வகிக்கப்போவதாக சிறிசேன அறிவித்துள்ளார். அடுத்த சில மாதங்களில் இலங்கையின் அரசியலில் எத்தகைய மாற்றங்கள் இடம் பெறும் என எதிர்வுகூறுவது மிகவும் சிரமமாகும். இந்நிலையில் வரும் தேர்தலானது பெரும் போட்டி நிறைந்ததாக அமையும்.

இதற்கும் மேலாக, நாட்டின் அரசியலில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதும், போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முடிவெட்டுவதற்கும் பல்வேறு தடைகள் நிலவுகின்றன. இந்நிலையானது கிட்டிய எதிர்காலத்தில் மிக முக்கிய விடயங்களாக அமைந்திருக்கும்.

இவ்வாறு foreignpolicy ஊடகத்தில் TAYLOR DIBBERT எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். -நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவுக்கு கடல் பயணமான 2 ஆயிரம் அகதிகள் உயிரிழப்பு!

## சர்வதேச புலம்பெயர் அமைப்பு தகவல்

**மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவிற்கு பயணத்தை மேற்கொள்ளும் முயற்சியின் போது இந்த வருடத்தில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான குடியேற்றவாசிகள் உயிரிழந்துள்ளதாக புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.**



கடந்த வாரம் வரையிலான தரவுகளின் பிரகாரம் மத்திய தரைக்கடலைக் கடக்கும் முயற்சியில் 2000 குடியேற்றவாசிகளும் அகதிகளும் உயிரிழந்துள்ளனர் என மேற்படி அமைப்பின் பேச்சாளர் இதாயி விர்றி ஜெனீவாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் இந்த வருடம் மத்திய தரைக்கடலைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட சுமார் 188,000 குடியேற்றவாசிகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை 112 பேருடன் பயணித்த படகொன்றிலிருந்து 4 பெண்கள் மற்றும் ஒரு ஆண் உட்பட ஐவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் அருந்த நீரின்றி உயிரிழந்துள்ளதாக நம்பப்படுகின்றது. (3-7)

# 3 மாடி கட்டடம் இடிந்து 12 பேர் பலி; 7பேர் காயம்

## இரண்டு வாரத்தில் 3ஆவது சம்பவம்



மும்பை அருகே கடந்த இரண்டு வாரங்களில் மூன்றாவது மாடி குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்ததில் 12 பேர் பலியானார்கள். 7 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

மும்பையை அடுத்த தானே ரயில் நிலையம் அருகிலுள்ள 50 ஆண்டுகால பழைமையான 3 மாடி கட்டடம் இருந்தது. இந்த கட்டடம் குடியிருப்பதற்கு தகுதியற்ற நிலையில் இருப்பதால் குடியிருப்புவாசிகளை காலி செய்யுமாறு மாநகராட்சி நோட்டிஸ் அனுப்பியது. ஆனால் 4 குடும்பத்தினர் மட்டும் வீடுகளை காலி செய்யாமல் அங்கேயே வசித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் அந்த கட்டடம் பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்து தரைமட்டமானது. கட்டடத்தில் இருந்த அனைவரும் இடிபாடுகளுக்குள் சிக்கினர். இதுபற்றி தீயணைப்பு படையினருக்கும், பேரிடர் மீட்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் மற்றும் பேரிடர் மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

மும்பை, தானேயில் கடந்த 2 வாரத்தில் நிகழ்ந்த 3ஆவது கட்டட விபத்து இதுவாகும். கடந்த 26 ஆம் திகதி தானே மும்ராவில் 3 மாடி கட்டடம் இடிந்து விழுந்தது. தானே தாக்குர்லியில் கடந்த 28ஆம் திகதி 3 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் 4 தமிழர்கள் உட்பட 9 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (3-7)

# ரயில்கள் தடம்புரண்டன 24 பேர் உயிரிழப்பு!

## 9 ரயில் பெட்டிகள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டன



மத்திய பிரதேசத்தில் 2 ரயில்கள் தடம் புரண்டு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 24 பேர் உயிரிழந்தனர். 40இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து உள்ளனர். 9 ரயில் பெட்டிகள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

மும்பையில் இருந்து வாரணாசி நோக்கி காமயானி எக்ஸ்பிரஸ் நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்தது. இந்த ரயில் மத்திய பிரதேச மாநிலம் ஹர்தா அருகே சென்ற போது தடம் புரண்டது. இதில் 6 பெட்டிகள் தடம் புரண்டு மசாக் ஆற்றில் விழுந்தன. விபத்து பற்றி தகவல் அறிந்த ரயில்வே உயர் அதிகாரிகள் மற்றும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். இதனிடையே ஜபல்பூரில் இருந்து மும்பை நோக்கி சென்ற ஜனதா எக்ஸ்பிரஸ் ரயிலும் அதே இடத்தில் தடம் புரண்டது. ஜனதா எக்ஸ் பிரஸ் ரயிலின் 4 பெட்டிகள் மற்றும் எஞ்ஜின் என்பன தடம் புரண்டு ஆற்றுக்குள் விழுந்தது. ஜனதா எக்ஸ்பிரஸ் எதிரப்புற தண்டவாளத்தில் வந்து உள்ளது.

இரு ரயில்கள் ஒரே இடத்தில் தடம் புரண்டு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 24 பேர் உயிரிழந்தனர். 40இற்கும்மேற்பட்டோர்காயம் அடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பாக தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரையில் 300 இற்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். காயம் அடைந்த 40இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை அளிக் கப்பட்டு வருகிறது. இரண்டு ரயில்களின் 9 பெட்டிகள் ஆற்றில் அடித்து செல்லப்பட்டுள்ளது என்பதால் உயிரிழப்பு அதிகரிக்க கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. தொடர்ந்து அங்கு மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மத்தியபிரதேசம் மாநிலத்தில் கனமழை பெய்து வந்ததன் காரணமாக குறிப்பிட்ட பகுதியில் ரயில் தண்டவாளத்தில் தண்ணீர் தேங்கி நின்று உள்ளது. இதனால் தண்டவாளம் மோசம் அடைந்து ரயில்கள் விபத்துக்குள் சிக்க காரணமாகி உள்ளது என்று ரயில்வே செய்தித் தொடர்பாளார் அணில் செக்சேனா தெரிவித்துள்ளார். ரயில் விபத்து ஏற்பட்ட இடத்தில் முழுவீச்சில் மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது. அதிகமான மக்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விபத்து நடந்த பகுதியில் மீட்பு குழுவினர் மற்றும் மருத்துவ குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். (3-7)

# விஸ்வநாதனுக்கு சென்னையில் சிலை அமைப்பு



(சென்னை)

மறைந்த இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு சென்னையில் சிலை அமைக்கப்பட்டு வருகிறது.

மறைந்த இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு தமிழ்நாடு திரையிசை கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் அண்மையில் நினைவஞ்சலி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கவிஞர் கண்ணதாசனின் மகன் காந்தி கண்ணதாசன் கலந்து கொண்டு பேசும்போது, "எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு சென்னையில் சிலை வைக்க வேண்டும். மயிலாப்பூர்லஸ் கார்னரிலோ, கடற்கரை சந்திப்பிலோ அந்த சிலையை நிறுவ வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டதாக கங்கை அமரன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், இசையமைப்பாளர்கள் இளையராஜா, கங்கை அமரன், எஸ்.ஏ.ராஜ்குமார், டி.இமான், ஸ்ரீகாந்த் தேவா, எஸ்.எஸ்.தமன், சந்தோஷ் நாராயணன், வித்யாசாகர், ஜி.வி.பிரகாஷ்குமார், பின்னணி பாடகர்கள் எஸ்.பி.சரண், ஹரிசரண், உன்னிகிரு[illegible] கலந்து கொண்டனர். (3-7)

# மதுவிலக்கை வலியுறுத்தி தமிழகத்தில் போராட்டம்

## 4500 பேர் கைதாகினர்

(சென்னை)

தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமுல்படுத்த வேண்டும் என்று கோரி பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் வணிக அமைப்புக்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தியுள்ளன.

இந்த சூழ்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உண்ணாமலைக்கடை என்ற இடத்தில் உள்ள மதுக்கடையை மூடக்கோரி தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஏறி போராட்டம் நடத்திய சசிபெருமாள் இறந்தார். இதனால் பூரண மதுவிலக்கு போராட்டம் தீவிரம் அடைந்தது.

மதுவிலக்கை அமுல்படுத்தக்கோரி ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், மனிதநேய மக்கள் கட்சி ஆகியவை கடை அடைப்பு போராட்டம் நடத்தின. இந்த போராட்டத்திற்கு தே.மு.தி.க., காங்கிரஸ், பா.ஜனதா, கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளும் ஆதரவு தெரிவித்தன.

சென்னையில் மட்டும் 36 இடங்களில் மதுவிலக்கு கோரி போராட்டங்கள் நடந்தன. சென்னையில் நடந்த போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் ரா.முத்தரசன், மனிதநேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் மொத்தம் 100 பெண்கள் உட்பட 1284 பேர் கைது செய்யப்பட்டனர். மாலையில் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் மொத்தம் 500 பெண்கள் உட்பட 4,500 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மதுக்கடைகள் மீதும், பேருந்துகள் மீதும் தாக்குதல் நடத்தியது, செல் போன் கோபுரத்தில் ஏறியது போன்ற சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்படவுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 34 பேருந்துகள் மீதும், விழுப்புரம் மாவட்டத் தில் 2 மதுக் கடைகள் மீதும் தாக்குதல் நடைபெற்றுள்ளது. (3-7)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தபால் விநியோகஸ்தர் மீது தனங்கிளப்பில் தாக்குதல்

இனந்தெரியாத நபர்களினால் தபால் விநியோகஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை முறைப்பாடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தபால் நிலைய உப அலுவலகமாகிய தனங்கிளப்பு தபால் நிலைய தபால் விநியோகஸ்தரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வழமைபோல் தபால் பொதிகளை தபால் நிலையத்திலிருந்து எடுத்துக்கொண்டு தனங்கிளப்பு சந்தியூடாக குறித்த தபால் விநியோகஸ்தர் நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் வந்து கொண்டிருந்த போது இனந்தெரியாத இரு நபர்களினால் இடைநிறுத்தப்பட்டு தாக்கப்பட்டதுடன் தபால் பொதிகளும் பறிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பறிமுதல் செய்யப்பட்ட தபால் பொதிகள் மீண்டும் தனங்கிளப்புச் சந்தியில் போடப்பட்டுள்ளதாக தாபல் விநியோகஸ்தரால் பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட தபால் ஒவ்வொன்றும் பிரிக்கப்பட்டு இருந்ததாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-29)




### பாடசாலைகள், கோவில்களுக்கு அண்மையில்

# மதுபான நிலையங்கள் அமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பில் மீளப் பரிசீலிக்க வேண்டும்

## யாழ்.வணிகர்கழக தலைவர் கோரிக்கை

**கடந்த காலங்களில் சட்ட நடைமுறைக்கு அப்பாற்பட்ட வகையில் பாடசாலைகள், கோவில்களுக்கு அண்மையில் பல மதுபான விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என யாழ்.வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் வடபகுதி சார்ந்த சமூக பொருளாதார அபிவிருத்திக்கான ஆலோசனை முன் மொழிவுகளை முன் வைக்கும் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.வணிகர் கழக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

போருக்கு முன்னைய காலப் பகுதியில் வடபகுதியில் இயங்கிய அரச, தனியார் தொழிற்சாலைகளை மீள இயக்க வேண்டும். குறிப்பாக அரசாங்க சார்பான பல தொழிற்சாலைகள் போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட மீள இயக்கப்படவில்லை.

குறிப்பாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இராசயனத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளையும், தனியார் தொழிற்சாலைகளையும் மீள இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வடபகுதி பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கேற்ற வகையில் பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாகவும், காங்கேசன்துறை துறைமுகத்தை வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கேற்ற வகையில் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுவலுவுடையோருக்கு ஏற்ற வகையில் வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கவேண்டும். விளை நிலங்கள் மற்றும் கடல் வளங்கள் மிக்க பல பிரதேசங்கள் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை நிறைவு செய்த பின்னர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவுள்ளது. இந்த நிலையில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கான தனியான பல்கலைக் கழகங்களோ தொழில்நுட்பக் கல்லூரிகளோ அல்லது வேறு சந்தர்ப்பங்களோ மிகவும் குறைவாகவுள்ளது.

எனவே குறித்த மாணவர்களுக்கான வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை நாம் தேட வேண்டும்.

குறிப்பாக இந்தியாவிலே எத்தனையோ வகையான பல்கலைக் கழகங்கள் வெவ்வேறு துறை சார்ந்த வகையில் காணப்படுகின்றன. அவ்வாறான கல்வி வசதி வாய்ப்புக்களை இலங்கையில் ஏற்படுத்துவதன் மூலம் பாடசாலை செல்ல முடியாத மாணவர்களை ஏனைய துறைகளில் வளர்த்தெடுப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும

மீன்பிடித் துறையைப் பொறுத்த வரை இலங்கையின் ஒரு முக்கியமானதொரு பொருளாதார வளமாகக் காணப்படுகிறது. கணிசமானளவு மக்களின் வாழ்வாதாரமாகவும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்குவதாகவும் மீன்பிடித்துறை காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் வெளிநாட்டினருக்கு எங்களுடைய கடற் பிராந்தியம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு வெளி நாடுகளுக்கு முறைகேடாக வழங்கப்பட்ட அத்தனை உரிமைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும். இலங்கை மக்கள் மாத்திரம் தங்களுடைய மீன்பிடி வளத்தைப் பயன்படுத்தும் வகையிலான சந்த்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அபிவிருத்தி சம்பந்தமான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த வேண்டும். அறிவு சார்ந்த தொழிற்றுறைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்தியமாகாண கைத்தொழில் மன்றத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் அசோகா அபேயவர்த்தன, பணிப்பாளர் ஏக்க நாயக்க, ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் பிரதிநிதி சுகந்தா, யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார், நிர்வாக சபை உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ரி.சோதிலிங்கம், கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ம.இக்னேசியஸ் மற்றும் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-9)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தின் மஹோற்சவ திருவிழா நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்ப மாகவுள்ளது.

இதற்கமைய 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத்திரு விழாவும், 15 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)

◆◆◆◆◆◆◆

கோப்பாய் மத்தி நாவலடி திருவருள் மிகு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடார்ந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 13 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 15 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)

# பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த யாழில் பாசிக் நிறுவனம் புதிய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகின்ற பாசிக் நிறுவனம் பெண்களிடமிருந்து பாவித்த சேலைகளை அன்பளிப்பாக கோரியுள்ளது.

பெண்களின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்ட பாசிக் நிறுவனம், பெண்கள் பாவித்த சேலைகளில் இருந்து பெண்களுக்கான மாற்றுடைகள், அலங்காரப்பொருட்கள், கைப்பை என்பவற்றை தயாரித்து வருகின்றது.

இத்திட்டத்திற்காகவே பாவித்த சேலைகளை பாசிக் நிறுவனம் பெண்களிடம் அன்பளிப்பாக கோரி நிற்கின்றது.

எனவே பெண்களின் மாற்று உடைகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் செய்வதற்கு உடனடியாக பாவித்த சேலைகளின் தேவை உள்ளதால் ஆர்வமுடையவர்களை சேலைகளை அன்பளிப்பாக வழங்கி இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல கைகொடுக்குமாறு பாசிக் நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

ஆர்வமுடைய சேலை நன்கொடையாளர்கள் இல.28, யாழ்ப்பாணம், கோவில் வீதியில் அமைந்துள்ள பாசிக் நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ளமுடியும் எனவும் அல்லது 021 222 1699 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் எனவும்கேட்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்கள் மற்றும் ஆடைகள் தயாரிப்பதற்கான பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டு இத்திட்ட மூலப்பொருளான பாவனையில் இல்லாத சேலைகள் நன்னொடையாளர்களிடம் இருந்து அன்பளிப்பாக சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு இத்துறை சார்ந்த வல்லுநர்களின் ஆலோசனைகளுடன் பயிற்றப்பட்ட ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் இம்மாற்று உடைகள் தைக்கப்பட்டு தரம் பரிசோதிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு கிடைக்கின்ற வருமானம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஜப்பானிய நிறுவன நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகளின் நன்மை கருதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## கல்விக் கண்காட்சி

பருத்தித்துறை நண்பர்கள் அமைப்பு வடமராட்சியில் இருந்து இந்த வருடம் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மேற்படிப்பு தொடர்பாக வழிகாட்டும் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கக் கூடிய அரச மற்றும் தனியார் உயர் கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து உயர்தர பரீட்சை முடிவுற்ற அடுத்தவாரம் கல்விக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு ஒன்றை பருத்தித்துறையில் நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. விரைவில் அது தொடர்பான விபரங்கள் கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்படவுள்ளதாக அமைப்பின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## பிரசாரக் கூட்டம்

ஐக்கிய சோசலிச கட்சியின் தேர்தல் பிரசார கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் நடைபெறவுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களுக்கு நடத்தப்பட்ட தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை





(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நாடெங்கிலுமுள்ள இளைஞர் கழக உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிசிப்பட்டறை ஒன்று மாவட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 இளைஞர்களுக்கான மூன்றுநாள் வதிவிட தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லத்தில் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை இடம் பெற்றது. இந்த பயிற்சிப்பட்டறையில் இளைஞர்களில் தலைமைத்துவத்தினை வளர்ப்பதற்கான பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# இனந்தெரியாத நபர்களினால் வயல் வெளிக்கு தீ மூட்டல்

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்திலுள்ள மடுக்கந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமடு பிரதேசத்தில் அமைந்துள்ள விமானப்படைத்தளத்திற்கு முன்பாகவுள்ள வயல்வெளிக்கு அண்மையில் இனந்தெரியாத நபர்களினால் தீமூட்டப்பட்டதையடுத்து விமானப்படைத்தளம் மயிரிழையில் தப்பியுள்ளது.அத்துடன் அருகில் இருந்த காட்டுப்பகுதியும் தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாமடு விமானப்படைத்தளத்திற்கு முன்பாகவுள்ள பரந்த வயல்வெளிக்கு இனந்தெரியாத நபர்களினால் தீமூட்டப்பட்டுள்ளது.

இத்தீயானது பரந்துபட்டு வேகமாக பரவியதை அடுத்து விமானப்படைத்தளத்தினையும் நெருங்கியுள்ளது.

இதனைஅடுத்து விமானப்படையினர் மேற்கொண்ட பாரிய முயற்சியை அடுத்து விமானப்படைத்தளம் பாதுகாக்கப்பட்டதுடன் தீ கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது.

ஆயினும் அருகில் இருந்த காட்டுப்பகுதி தீயில் கருகி நாசமாகியுள்ளது. தீ வைப்பு சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களைத் தேடி மடுக்கந்தை பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# தேர்தல் சட்டமீறல்கள் குறித்து 9 முறைப்பாடுகள் பதிவாகின

## மன்னார் அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் தொடர்பான 9 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ். தேசப்பிரிய தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், குறித்த முறைப்பாடுகளில் எவையும் பாரதூரமானவையாக இல்லை எனவும் 9 முறைப்பாடுகளும் சாதாரண மானவை எனவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்தில் 79 ஆயிரத்து 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளநிலையில் தேர்தலின் போது 70 வாக்கெடுப்பு நிலையங்களும், 7 கணக்கெடுப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளது. தேர்தல் தொடர்பான அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது இடம்பெற்று வருவதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (2-281)

# துணுக்காய் பிரதேச சபை புறக்கணிக்கப்பட்டுள்ளது

## பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்

(மல்லாவி)

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வடபகுதியில் இயங்குகின்ற பிரதேச சபைகளுக்கு அண்மையில் வழங்கப்பட்ட மண் அகழ்கின்ற செப்பனிடுகின்ற கனரக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் துணுக்காய் பிரதேசசபை புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட 168 கிலோமீற்றர் கிரவல் வீதிகள் செப்பனிடுகின்றபோது பெருமளவான நிதி விரயம் ஏற்படுவதுடன் கால விரயமும் ஏற்படுவதாக பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வடக்கு மாகாணத்திலுள்ள பல பிரதேசசபைகளுக்கு மண் அகழ்கின்ற பக்கோ இயந்திரங்களும் மண்ணைப் பரவி செப்பனிடுகின்ற புல்டோசர்களும் வீதியினை செப்பனிடுகின்ற கல் ரோலர்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை மேற்படி இயந்திரங்களின் பயன்பாடு தேவையான துணுக்காய் பிரதேச சபைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டிருந்த போதும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு இதனைப் பெற்று தருவதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சில பிரதேச சபைகளில் மேற்படி வழங்கப்பட்ட இயந்திரங்களின் பயன்பாடு தேவையற்று காணப்படுகின்ற நிலையில் அவற்றினைதுணுக்காய்பிரதேசசபைக்குகிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றனர்.(2-15)

துணுக்காய், மாந்தை கிழக்கு

# பிர.செயலக பிரிவுகளுக்கு பயணிக்கின்ற பேருந்துக்களின் எண்ணிக்கை குறைவு

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் இருந்து துணுக்காய்,மாந்தை கிழக்குஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள கிராமங்களுக்கு தேவையின் நிமிர்த்தம் செல்லும் பொதுமக்கள் கட மையின் நிமிர்த்தம் பயணிக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனப்பணியாளர்கள் ஆகியோர் பேருந்துக்களில் கடமை நேரத்தில் காணப்படும் அதிகரித்த இடைவெளி காரணமாக உரிய நேரத்திற்கு செல்ல முடியாது அவல நிலைப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் நகரத்தில் அதிகாலையில் இருந்து நண்பகல் வரை துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளுக்கு சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துக்களின் எண்ணிக்கைகுறைவாக இருப்பதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு பேருந்தின் சேவைக்கும் மற்றைய பேருந்தின் சேவைக்கும் இடையில் 1 1/2 மணித்தியாலயத்திலிருந்து 2மணித்தியாலங்கள் வரையிலான இடைவெளி காணப்படுவதால் பயணிகள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப்பலதரப்பினரும் பாதிப்பை எதிர்கொள்வதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிக்கும் இரவுநேர தபால் புகையிரதத்தில் பயணத்தை மேற்கொள்ளும் மேற்படி இரு பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட மக்கள் மாங்குளம் புகையிரத நிலையத்தில் அதிகாலை 4.30 மணியி லிருந்து முதலாவது பேருந்து சேவை ஆரம்பிக்கும் காலை 8.20மணி வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

எனவே வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்,யாழ்ப்பாணம், வவுனியா,முல்லைத்தீவு ஆகிய மாவட்ட ங்களிலுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்கள் மற்றும் இ.போ.ச. பேருந்து சாலை முகாமையாளர்கள் ஆகியோருடன் மேற்படி போக்குவரத்து குறைபாடு தொடர்பாக கலந்துரையாடி போக்குவரத்து சேவையினை சீர்செய்து தருமாறு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர். (2-15)




# நேற்றும் இன்றும் தபால்மூல வாக்களிப்பு

## கண்டாவளை பிரதேச செயலகத்தில்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்றும் இன்றும் இடம்பெறுகின்றது.

கண்டாவளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பில் 95வீதமான உத்தியோகத்தர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு தேர்தல் கண்காணிப்பு அலுவலர்கள், அதற்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் ஆரம்பமான குறித்த வாக்களிப்பு பிற்பகல் 3 மணியுடன் நிறைவுபெற்றது. சுமூகமான முறையில் நடைபெற்ற இந்த தபால்மூல வாக்களிப்பு இன்றும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயசூரியன் வி.க.நடத்தும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## சென்.மேரிஸ், கணேசானந்தா வெற்றி



உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்துப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த முதல் போட்டியில் சக்திவேல் விளையாட்டுக்கழகம் மற்றும் கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் சக்திவேல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. அவர்கள் 11.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் றொபின் 4 விக்கெட்டுக்களையும் பெற்றுக்கொண்டார்.

64 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

நேற்றைய முதலாவது போட்டியில்கட்டைக்காடுசென்மேரிஸ்விளையாட்டுக்கழகம் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழகம் மற்றும் அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகங்கள் மோதின. இதில் கணேசானந்தா விளையாட்டுக்கழகம் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அதன்படி துடுப்பெடுத்தா டிய பிங்பொங் விளையாட்டுக் கழகம் 12 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கணேசானந்தா விளையாட்டுக்கழகம் 11.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நட த்தும் வடமாகாண ரீதியிலான உதை பந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் சேவியர் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மூளாய் வளர்மதி விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க)

# மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

தொண்டைமானாறு விளையாட்டுக்கழகம் SIVAN FOUNDATION (JAFFNA) இன் அனுசரணையுடன் நடத்துகின்ற 6 நபர் 5 பந்துப் பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. ஆகவே போட்டியில் கலந்து கொள்கின்ற கழகங்கள் தத்தமது கழக பெயர்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: போட்டியில் பங்கு பற்றுகின்ற அனைத்துக் கழகங்களுக்கும் விளையாட்டு உபகரணங்களுடன் கேடயமும் வழங்கப்படும். நுழைவுக்கட்டணம்: 800 ரூபா

வெற்றிபெறும் கழகங்களுக்கு , முதலாம் இடம் வெற்றிக்கேடயத்துடன் 10 ஆயிரம் ரூபா, 2 ஆம் இடம் வெற்றிக் கேடயத்துடன் 5 ஆயிரம் ரூபா, 3 ஆம் இடம் வெற்றிக்கேடயத்துடன் 3 ஆயிரம் ரூபா.

தொடர்புகளுக்கு 077 475 1988, 077 485 9596 (க)



## கலைமகள் வெற்றி

உதயசூரியன் விளையாட்டுக கழகம் நடத்தும் மென்பந்து போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணி மற்றும் மாமுனை கலைமகள் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பிரதேச செயலக அணியினர் துடுப்பாட்டத்தினை தெரிவு செய்து துடுப்பெடுத்தாடினார்கள். அவர்கள் 11.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக்கழகம் 3.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. (க)

# நெடியகாடு இ.கழக மென்பந்து தொடர்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் இரண்டு மென்பந்து சுற்றுத் தொடர்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 5 பந்துப் பரிமாற்றம் 6 நபர் கொண்ட சுற்றுத் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதால் பங்கேற்க விரும்பும் கழகங்கள் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

முதல் பரிசு -வெற்றிக் கிண்ணம் + 6 ஆயிரம் ரூபா பணப்பரிசு

இரண்டாம் பரிசு–வெற்றிக் கிண்ணம்+ 3 ஆயிரம் ரூபா பணப்பரிசு

தொடர்புகளுக்கு 077 937 7108, 077 183 4695 (க)

# றெஜின்போ வி.கழக மென்பந்தாட்ட போட்டி

வல்வை றெஜின்போ விளையாட்டுக் கழகத்தினால் VALVAI DOMESTIC PREMIER LEEK PLAY OFF ஆட்டங்களும் இறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த சுற்றுத் தொடரில் 7 அணிகள் பங்குபற்றிய போதிலும் நான்கு அணிகள் PLAY OFF சுற்றுக்கு தகுதி பெற்றன.

றெஜின்போ விளையாட்டுக் கழகம், சைனிங்க்ஸ் விளையாட்டுக் கழகம், நேதாஜி விளையாட்டுக் கழகம், உதயசூரியன் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்கள் PLAY OFF சுற்றுக்கு தகுதி பெற்றன.

இறுதிப் போட்டியில் றெஜின்போ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் றெஜின்போ விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (க)

# லசித் மலிங்க ஒரு ஜென்டில்மன்

## அவர் தலைமுடியை பார்க்கவேண்டாம்




கிரிக்கெட்டின் சகாப்தமான டெண்டுல்கர் ஐதராபாத்தில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாவது,

இலங்கை அணியின் வேகப்பந்து வீரர் மலிங்கவுடன் மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடி இருக்கிறேன். அவர் பந்துவீச்சு முறை முற்றிலும் மாறுபட்டது. உலகின் எந்த ஒரு பவுலரும் அப்படி வீசுவது இல்லை.

உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீரர் ஆவார். அவர் முழுமையான ஜென்டில்மேன். அவரது தலைமுடியை பார்க்க வேண்டாம். அவரது பந்துவீச்சு தன்மையை பாருங்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்து கொள். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தென்பகுதி மக்களுக்கு ஓர் அன்பு மடல்!

அன்புக்கினிய தென்பகுதி மக்களுக்கு வணக்கம்!

நாட்டில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலால் தென்பகுதி எங்கும் விழாக்கோலம் என்று அறிந்தேன். இடையிடையே வன்முறைகளும் இடம்பெறுவதாக அறியமுடிந்தது.

தேர்தல் வன்முறையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஆண் ஒருவரும் பெண்மணி ஒருவரும் உயிரிழுந்ததாக அறிந்து ஆழ்ந்த கவலை கொண்டேன்.

உயிரிழுந்தவர்களின் குடும்ப நிலை கண்டு கவலை தாளவில்லை. இழப்புக்களால் எங்கள் தமிழ் இனம் படும் அவலம் கொஞ்சமல்ல. ஆகையால் கலகமற்ற முறையில் தேர்தல் நடந்தேற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வடபுலத்தின் தேர்தல் நிலைமை எப்படி என்று அறிய நீங்கள் ஆர்வமாய் இருப்பீர்கள் என்பது நன்கு தெரியும்.

அரசியல் வெறுப்பால் தமிழ் மக்கள் தாம் உண்டு தங்கள் பாடுண்டு என்பதாக இருக்கின்றனர்.

எத்தனையோ அழிவுகளைச் சந்தித்த தமிழ் இனத்திற்கு அழு கண்ணீர் மட்டுமே இப்போது சொத்தாக உள்ளது. எனினும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

பார்வையாளர் இல்லாத பாட்டுக் கச்சேரி நடக்கிறது. வடக்கின் முதல்வர் மரியாதைக்குரிய விக்னேஸ்வரன் அவர்கள் மேடையேறி தேர்தல் பிரசாரம் செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

அவருக்கும் அரசியலில் கடும் வெறுப்பு. எனினும் எதிர்வரும் 17ஆம் திகதி வடக்கில் தேர்தல் நடக்கும். இலங்கையில் தேர்தல் சுமுகமாக நடந்த ஒரே மாகாணம் வடக்கு என்ற செய்தியை நீங்கள் நிச்சயம் அறிவீர்கள். இது ஒருபுறம் இருக்க, தென்பகுதியில் கடும் போட்டி நடப்பது பற்றி நாங்கள் அறிந்த வண்ணம் உள்ளோம்.

ஜனாதிபதி மைத்திரி அவர்களின் மௌனம் எதற்கானது என்பது தெரியவில்லை. இந்த நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவைத் தெரிவு செய்த நீங்கள், இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த துணிந்துவிட்டீர்கள் என்பது நம் கணிப்பு.

தென் பகுதியில் தேர்தல் முடிவுகள் எங்ஙனம் அமையும் என்பது பற்றிய விபரங்களை அறிய ஆவலாக உள்ளோம்.

இந்த நாட்டில் அரசியல்வாதிகள் ஏற்படுத்திய இனவாதத்தை முடிவுறுத்த வேண்டுமாயின் அது தென்பகுதி மக்களால்தான் முடியும்.

எனினும் உங்களின் சிந்தனை மாற்றத்துக்கு இடம்தராமல் தென்பகுதி அரசியல்வாதிகள் தமிழ் இனம் பற்றி மிக மோசமான பிரசாரங்களைச் செய்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளை ஒழித்துவிட்டோம் என்று கூறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நடந்துகொண்டிருக்கும் பிரசாரத்தில் பல தடவைகள் விடுதலைப்புலிகள் பற்றி உச்சரித்து விட்டார்.

இது எதற்கானது? விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களை தன்னோடு வைத்திருந்த மகிந்தனார், மீண்டும் புலிகள் பற்றி உச்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. எதுவாயினும் தென்பகுதி மக்களிடம் நிறைய மாற்றம் நடந்துள்ளது என்று அறிய முடிகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் நீங்கள் உறுதியாக இருப்பதாகக் கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

எதுவாயினும் நடைபெறப்போகும் தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களிக்க உள்ளீர்கள் என்பது தெரியாதாயினும் இன்னொரு இனவாதம் இந்த நாட்டில் ஏற்படாதவாறு உங்கள் வாக்குகளைப் பிரயோகியுங்கள்.

நாட்டில் அமைதி, சமாதானம், நிலவட்டும். ஊழலும் மோசடிகளும் இல்லாது போகட்டும்.

ஒரு அமைதியான ஆட்சி நாட்டில் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# பிரிவினைவாதத்தை நோக்கியே எதிர்பார்த்த மாற்றம் செல்கிறது

## சிந்தித்து வாக்களிக்குமாறு சுசில் அறிக்கை

(கொழும்பு)

மாற்றத்தை எதிர்பார்த்து ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மக்கள் இம்முறை பட்டலந்த என்ற இறந்த காலத்தை எண்ணிப்பார்க்குமாறு கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதனால், இம்முறை பொதுத் தேர்தலில் மிகவும் சிந்தித்து வாக்குகளை பயன்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

வடக்கில் இருந்து வந்து குருநாகலில் போட்டியிடும் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தேவையானது சமஷ்டி முறையாகும். அதனை வழங்காது போனால், ஐக்கிய நாடுகள் ஊடாக அதனை பெற்றுக்கொள்ள போவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஈழ வரைபடத்தை பின்னணியாக கொண்டு தமது சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். நாட்டை பிரிவினைவாதத்தை நோக்கி இட்டுச் செல்ல இவர்கள் மேற்கொள்ளும் முயற்சி தெளிவாகியுள்ளது.

இதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிடுகிறேன் என்று சொல்ல சம்பிக்க ரணவக்க வெட்கப்படுகிறார். ஆனால் அவர், ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரை பயன்படுத்துகிறார். எனினும் உண்மையில் அப்படியான கட்சி எதுவுமில்லை எனவும் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# மகிந்த மீது அவதூறு; புத்தகங்கள் மீட்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற, முன்னாள் ஜனாதிபதியின் பெயருக்கு அவதூறு ஏற்படும் வகையில் அச்சடிக்கப்பட்டுள்ள சில தொகையான புத்தகங்களை நேற்று பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொரலஸ்கமுவவில் உள்ள திவுலபிடிய வீதியில் அமைந்துள்ள அச்சகத்திலே இப்புத்தகங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. ஆர்.எம். ஆர். அச்சகமே இந்த புத்தகங்களை அச்சிடும் பணியை தமக்கு வழங்கியதாக திவுலபிடிய வீதியில் உள்ள அச்சகத்தின் உரிமையாளர் கூறியுள்ளார்.

கடவத்தை வீதி பெப்லியானவில் அமையப் பெற்றுள்ள ஆர் எம் ஆர் அச்சகம் தற்போது முற்றுகையிடப்பட்டுள்ளதாகவும், அங்கு இருந்த அச்சு இயந்திரங்கள் மற்றும் பிற பொருட்கள் யாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரொஜர் செனவிரட்ன,

ஐக்கிய தேசிய கட்சி தனது தோல்வி பயத்தின் காரணமாகவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், நாட்டை காப்பாற்றிய ஒருதலைவனுக்கு சேறுபூசுகின்ற நடவடிக்கைகளையே இவர்கள் மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)



# சத்திய தரிசனம்

## கடவுளை அடைய மூன்று வழிகள்

❖ மனம், ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலர் போன்றது. அதன் ஒவ்வொரு இதழும் உலகமாயைகளுக்கு ஆசைப்பட்டு செல்ல விரும்பும். ஆனால், நீங்கள்தான் அதனைகட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நல்ல மனம்கூடவீணாகப்போய் விடும். மனதை கட்டுப்படுத்தி இருப்பவர்களை, வெளியில் ஏற்படும்எத்தகைய துன்பங்களும் பாதிக்காது.

❖ கடவுளை அடையவேண்டும் என விரும்புபவர்கள் அதற்காக சிரத்தையான செயல்களைசெய்ய வேண்டும் என்பதில்லை. எளிதாக மூன்று வழிகளை மட்டும் பின்பற்றினால்போதும். இதயத்தை அன்பிலும், செயல்களை நேர்மையிலும், உணர்ச்சிகளைகருணையிலும் நனைத்துவிடுங்கள். இந்த மூன்றையும் சரியாகச் செய்தாலே, கடவுளைவெகு சீக்கிரத்தில் அடைந்து விடலாம்.

❖ இரும்புத்துண்டை நீரில் போட்டால் மூழ்கிவிடும். ஆனால், அதே இரும்பினை இலகுவாக்கி சிறிய பாத்திரமாக செய்து நீரில் விட்டால் மிதக்கும். இதைப் போலவே மனதையும் இலகுவாக மாற்றிக்கொண்டால் உலக ஆசை என்ற மாயையில்மூழ்காமல், அதன் மீது பற்றில்லாமல் மிதந்து கொண்டிருக்கும்.

❖ மனதில் எப்போதும் இறைவனை மட்டுமே நினைத்துக் கொண்டிருங்கள். அவரது நாமத்தையே உச்சரியுங்கள். இறைசெயல் அல்லாத வேறு செயல்களில் ஆர்வம்காட்டாதீர்கள் . இப்படிப்பட்டவர்களின் மனம், பூக்களில் இருந்து தேனை மட்டுமே எடுத்துக்கொள்ளும் தேனீக்கு சமமானதாக இருக்கும்.

# ஒபாமாவுக்கு மைத்திரி வாழ்த்து

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் 54 வது பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் தளத்தில் மேற்படி வாழ்த்து செய்தியை பதிவிட்டுள்ளார்.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதிக்கு இந்த பிறந்தநாள் ஒரு மறக்க முடியாத நாளாக இருக்கும் என எதிர்பார்ப்பதாக மகிழ்ச்சியை தெரிவித்துள்ளதோடு தமது முன்மாதிரியான தலைமைத்துவத்தை தொடர்வதற்கு வலிமையை தரப் பிரார்த்திப்பதாகவும் அந்த டுவிட்டர் பதிவில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார். (செ-11)

# சந்தேக நபர் சரணடைவு

(கரணவாய்)

கரவெட்டி கிழக்கு துன்னாலை குடவத்தை பகுதியில் கடந்த மாதம் 30 ஆம் திகதி மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்த சந்தேக நபர் நேற்றைய தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதி மன்றத்தில் சரணடைந்துள்ளார்.

குற்றத்தை ஒப்புக் கொண்டு நீதி மன்றத்தில் சரணடைந்துள்ள மேற்படி சந்தேக நபரினை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி. மா.கணேசராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார். (செ-5,60)



# அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத்தகவல்கள்

## இறைவன் ஏன் உயிர்களுக்குச் சிரமம் கொடுக்கிறார்?

ஒரு பாடசாலை வகுப்பறையில் பாடம் நடத்தும் வாத்தியார் ஏன் மாணவர்களை அடிக்கின்றார். ஏன் படிக்கத் தெரியாத பாடத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்கின்றார்? அப்படியெல்லாம் செய்யச் சொல்வது எதற்காக? அந்த மாணவன் கெட்டுப் போக வேண்டும் என்றா செய்கின்றார். கிடையாது. அவன் மென்மேலும் அறிவுத்திறன் வளர்ந்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதற்காகத்தானே அப்படிச் செய்கிறார்.

அதேசமயம் நன்றாகப் பாடத்தைப் படித்துவிட்டால் அவர் ஏன் அடிக்கப் போகிறார்.

அதுபோலத்தான் இறைவனும் ஆத்மாவானது தனது நிலையைப் புரிந்து கொண்டு உலகப் பற்றுக்களில் இருந்து விடுபடவேண்டும் என்றுதான் அவ்வாறு செய்கின்றார். சரியாகப் பரீட்சை எழுதாத ஒரு மாணவன் அதே வகுப்பில் பெயிலாகி மீண்டும் அதே வகுப்பில் படிக்கின்றான். அவன் எப்போது பாடத்தைக் கற்றுச் சரியாக பரீட்சை எழுதுகின்றானோ அப்போதுதான் மேல்வகுப்பிற்குத் தேர்ச்சி பெறுவான்.

அதேபோன்றுதான் இந்த உலகம் ஒரு பரீட்சை மண்டபம். இதில் ஆத்ம சொரூபமாகிய நாம் உலகப் பற்றை விட்டு உண்மை நிலை எது என எப்போது உணர்கின்றோமோ அப்போதுதான் சிவலோகம் எனும் மேல்வகுப்பிற்குத் தேர்ச்சியாகிச் செல்ல இயலும். அப்படி நாம் தேர்ச்சி பெறாத நிலையில் இதேபூவுலகில் மீண்டும் மீண்டும் பிறப்பெய்தி இறக்க வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு எமது பிரதிநிதித்துவத்தை அதிகரியுங்கள்

### விஜயகலா வேண்டுகோள்

**தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணபதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்.மண்ணில் உறுதியளித்துள்ளார். அடுத்த ஆட்சியில் எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணமுடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளரும் மகளிர் விவகார பிரதியமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



இளவாலையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தினால் தமிழ் மக்கள் உயிர்களையும் உடைமைகளையும் இழந்தனர். இன்றும் எமது மக்கள் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியாமல் துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வாழ்கின்றனர். வடக்கில் படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகள் மீளவும் வழங்கப்பட வேண்டும். அதி பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு பொது மக்கள் மீளக்குடியேற்றப்பட வேண்டும். காணாமற்போனோர் பிரச்சினைக்கும் அரசியல் கைதிகளின் விவகாரத்திற்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

சில தினங்களுக்கு முன்னர் வடக்கிற்கு விஜயம் செய்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களின் காணிகள் மீளவும் வழங்கப்படும் என்றும் காணாமற்போனோர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் உறுதியளித்திருந்தார். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படும் எனவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படும் எனவும் தெரிவித்துள்ளார். தேர்தலில் தமிழ் மக்கள் எமது பிரதிநிதித்துவத்தை இங்கு அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் நாம் அரசாங்கத்தில் பங்காளிகளாக மாறி பேரம்பேசும் சக்தியாக திகழலாம்.

இவ்வாறான நிலையில் யாழ். மாவட்ட மக்களின் பிரச்சினைகளையும் இலகுவில் தீர்த்துக்கொள்ள முடியும். யாழ்.மாவட்டத்தில் இளைஞர், யுவதிகள் பெருமளவில் வேலையற்று இருக்கின்றனர். யுத்தத்தின் போது கணவனை இழந்த பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றன. இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கும் கணவனை இழந்த பெண்களின் பிரச்சினைக்கும் தீர்வுகாண்பதற்கும் புதிய அரசாங்கத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனக்கு உறுதியளித்துள்ளார்.

இனவாதத்தை கக்கி ஆட்சியைக கைப்பற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷ தரப்பு முனைந்து வருகின்றது. வடக்கு, கிழக்கைப் பிரித்து ரணில் விக்கிரமசிங்க தமிழர்களிடம் வழங்கவுள்ளதாக பிரசாரம் செய்யப்படுகிறது. இவ்வாறான இனவாதங்களுக்கு ஆதரவாக குடாநாட்டிலும சிலர் செயற்பட்டு வருகின்றனர். மகிந்தராஜபக்ஷ வெற்றிபெற்றால் என்ன நடக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எனவே மக்கள் அனைவரும் சிந்தித்து எதிர்வரும் 17ஆம்திகதி உங்களது வாக்குகளை அளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பெண்களின் பிரச்சினைகள் குறித்து நாம் உரிய கவனம் செலுத்துவோம்

### மதினி நெல்சன் தெரிவிப்பு



பொதுத்தேர்தல் கடந்த கால தேர்தல்களில் இருந்து வேறுபட்டதொன்றாக பார்க்கப்படுகின்றது எனவும் பெண்களின் பிரச்சினை தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படும் எனவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் திருமதி மதினிநெல்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எங்கள் இனத்தையும் தேசியத்தையும் அங்கீகரிக்காத இலங்கை அரசின் காலடியில் ஒரு போதும் நாம் மண்டியிடப்போவது இல்லை.

மாறாக எங்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கவும் எங்களின் சொந்த அபிலாசைகளை வென்றெடுக்கவும் எங்களின் சொந்த முயற்சியினால் தொடர்ந்து போராடி எங்கள் சமூக மீளெழுச்சியை முன்கொண்டு செல்வோம்.

இந் நாட்டில் பொருளாதார ரீதியில் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக போரினால் பாதிப்படைந்த, நலிவடைந்த சமூகங்களின் பெண்களுக்கு சமூக அபிவிருத்தித் திட்டங்களில் சம வாய்ப்புக்கள் இன்னமும் பகிரப்படவில்லை.எங்கள்பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளுக்கும் பாலியல் கொடுமைகளுக்கும் எதிராக கடுமையாக போராட வேண்டியிருக்கின்றது.

எங்கள் பிள்ளைகள் திட்டமிட்டு இலக்கு வைக்கப்படுகிறார்கள். அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இத்தனை எதிரிகளையும்தடைகளையும்உடைத்து எங்கள் பெண்களுக்கும் பிள்ளை களுக்கும் ஆரோக்கியமான வாழ்க்கையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தமிழ்த்தேசியத்துக்கான அங்கீகாரத்தை அடைவதற்கான எங்கள் இனத்தின் தேசிய விடுதலைப் பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை வலியினால் சிதைந்து போன எங்கள் வாழ்வினைக் கட்டியெழுப்புகின்ற அழிக்கப்பட்ட தேசத்தையும் நிலங் களையும் மீட்டெடுக்கின்ற தேச மீள் கட்டுமானப் பணிகளையும் சமாந்தரமாக திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றோம்.

அதேவேளை எங்களின் சமூகத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு இலங்கை அரசிடம் மண்டியிட்டோ யாசகம் பெற்றோ முன்னெடுக்க வேண்டிய அவசியமில்லை.

இலங்கை அரசும் அதன் கொடூர முகமும் எங்கள் பெண்களையும் பிள்ளைகளையும் இலக்கு வைத்து வஞ்சனை செய்து கொன்று அழித்து வருகின்றது.

யுத்தம் ஓய்ந்த பின்னரும் எங்கள் பெண்களின் கண்ணீர் குறையவில்லை. எங்கள் பிள்ளைகளின் மரணங்கள் ஓயவில்லை. அவர்கள் இன்றும் எதிரிகளுடன் போராடியே வருகின்றனர்.

கணவனை இழந்த பெண்கள் பெற்றோரை இழந்த பிள்ளைகள், தேசத்துக்காக தங்கள் பிள்ளைகளை பறிகொடுத்தவர்கள் என பலதரப்பட்டவர்களின் கண்ணீரும் வலிகளும் இன்றும் ஆறவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சுயநலம் கொண்ட அரசியல் நகர்வை தூக்கி எறியுங்கள்

### குகேந்திரன் தெரிவிப்பு



செல்வநாயகம் காலம் தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்கள் கொண்டுவந்த தீர்வுத் திட்டங்கள் எதுவும் நமக்கு பயனற்றுப் போனதற்கும் ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டதற்கும் தமிழர்களை தலைமைத்துவம் செய்த தலைவர்களது தற்துணிவற்றதும் தூரநோக்கற்றதுமான அரசியல் நகர்வுகளே காரணம். இந்த தலைமைத்துவத்தை மாற்றியமைத்து ஒரு தூரநோக்குள்ள அரசியற் தலைமையையே இந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தெரிவு செய்யவுள்ளனர். அந்த தலைமை எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவாகவே அமையவுள்ளது - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளருமான வேலும் மயிலும் குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

எமது சின்னமான வீணையை தென்னிலங்கை அரசுகளுக்கு அடகு வைத்து விட்டோம் என்றும் தமிழரது உரிமைகளையும் சிங்களவர்களுடன் சேர்ந்து தடுத்து நிறுத்துகிறோம் என்றும் கூறித்திரிந்தவர்கள் தமிழ் மக்களுக்கு இதுவரை எதனை பெற்றுக்கொடுத்துள்ளனர் என சிந்தித்துப்பாருங்கள்? நாங்கள் தமிழ் மக்களது வாழ்வியலை வைத்து ஒரு போதும் அரசியல் நடத்தியது கிடையாது. அதனால்தான் எங்களால் தமிழ் மக்களுக்கு இன்றுவரை சேவைகள் செய்து கொடுக்க முடிந்துள்ளது.

தென்னிலங்கையில் பலம பொருந்தியிருந்த அரசுகளுடன் ஒரு பங்காளியாக இருந்து வந்ததனால்தான் வடக்கின் அபிவிருத்திகளையும் வறிய மக்களது வாழ்வாதாரங்களையும் கட்டியெழுப்ப முடிந்தது. இதை பலர் பலவாறு விமர்சித்திருந்தனர். அவர்களது தூற்றுதல்களையெல்லாம் கண்டு நாங்களும் ஒதுங்கியிருந்தால் குடாநாடடின் மக்களது வாழ்வியல் நிலை கேள்விக்குறியானதாகவே மாறியிருக்கும். கடந்தகால குடாநாட்டின் நிலைமைகளை ஒருதரம் சிந்தித்துப்பாருங்கள்.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் கூட்டமைப்பினர் தட்டிக்கழித்து வந்தபோதும் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சரிவர பயன்படுத்தி வந்தமையால் தான் எமது குடாநாட்டு மக்கள் வாழ்வியலில் மேம்பட முடிந்துள்ளது.

போராட்டத்தில் அசைக்க முடியாத பலங்கொண்டிருந்த புலிகளைக்கூட தவறான அரசியல் நகர்வுகளால் அரசியல் ரீதியில் தோற்கடித்து தமிழரது ஆயுதப் போராட்டத்தையே அடியுடன் அழித்துவிட்டனர். தற்போதும் தேசியம் பேசிக் கொண்டிருப்பவர்கள். இது வரை தமிழ் மக்கள் கண்ட அழிவுகளுக்கு பொறுப்பக் கூற வேண்டியவர்கள் தற்போதைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர்தான். ஆனால் தற்போது இவற்றை யெல்லாம் மறைத்து தமிழ் மக்களை தொடர்ந்தும் முட்டாள்களாக்க முயல்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி தேர்...

வும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில், தமது முன்னணிக்கு 117 இடங்களில் வெற்றி கிடைக்கும் என்றும் அதையடுத்து தான் பிரதமராகப் பொறுப் பேற்பது உறுதி என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு தனக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே மூன்று சந்திப்புகள் இடம்பெற்றதை அவர் உறுதிப்படுத்தும் அதேவேளை, மூன்றாவது சந்திப்பு ரகசியமானது, அது குறித்த விவரங் களை வெளியிட முடியாது எனவும் கூறினார்.

நாட்டில் ஜனாதிபதியாக உள்ளவர் எவ் வளவு முறை வேண்டுமானாலும் மீண்டும் அப்பதவிக்கு போட்டியிடலாம் எனக் கூறும் சர்ச்சைக்குரிய 18ஆவது சட்டத் திருத்தத்தை கொண்டு வந்ததையும் அவர் நியாயப்படுத் தியுள்ளார்.

முதல் முறையாக அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்தார் என்று பிரத மர் ரணில் விக்கிரமசிங்க கூறும் குற்றச் சாட்டையும் மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள் ளார்.

தனது ஆட்சிக் காலத்தில் சில ஊழல் பேர் வழிகளை தான் காப்பாற்றியுள்ளதையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் ஊடகவியலாளர்கள் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டதற்கும், பிரகீத் எக்நலிகொட காணாமல் போனதற்கும் காரணமானவர்கள் தற்போதைய அரசில் உள்ளனர் என்று தான் நம்புவதாகவும் மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## தபால்மூல...

யப்பட்டுள்ளார். இவருடன் இவரது ஆதர வாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள் ளார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு தபால் மூல வாக்களிப்பு நடைபெற்ற கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு சென்று வாக்களிப்புக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதான கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் அவருடைய ஆதரவா ளரும், மாலை 3.20 மணியளவில் திரு கோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் நீதவான் தலா 50,000 ரூபாய் அபராதத்துடனான சரீரப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார். (செ-12)

## தீய சக்தி...

நாயகத்துக்கு எதிராக செயற்படுகின்ற விசமிகளை தோற்கடித்தல் மிகவும் இன்றிய மையாதது எனவும் சந்திரிகா மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டின் நல்லாட்சியை முன்னோக்கி செலுத்துவதற்காக பொருத்தமான பிரதிநிதி களை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டும் பாராளுமன்றத்தினை மக்களின் பிரச்சினை களை நிறைவேற்றுகின்ற ஒரு நிறுவனமாக உருவாக்குதல் அவசியம்.

எனவே மக்களின் வாக்களிப்பானது, நல்லாட்சியினை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் மிகவும் புத்திசாதுரியமாக அமை தல் வேண்டும் எனவும் அறிக்கையில் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். (செ-11)

## அம்நீசியா...

ளார். 800 மில்லியன் ரூபாயை ராடா நிறு வனம் ஊடாக நேரடியாக பிரபாகரனின் கைகளில் வழங்கியவரும் மகிந்தவே.

இதனால் பிரபாகரனின் ஆசிகளுடன் 2005 ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றி ஈட்டினார்.

அந்த வகையில் பிக்குமார் படுகொலை மற்றும் 600 பொலிஸாரின் வாழ்வை ஒழித்த கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதர னுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உப தலைவர் பதவி வழங்கிய வரும் மகிந்தவே.

பிள்ளையானுக்கு கிழக்கின் முதலமைச் சர் பதவியையும் மகிந்தவே வழங்கினார். இவை எல்லாம் "அம்நீசியா" என்ற நோய் ஏற்பட்டுள்ள மகிந்தவுக்கு மறந்து விட்டது.

மகந்த ராஜபக்ஷவும் அவரின் இன வாதக் குழுவினரும் குறுகிய அரசியல் காரணங்களுக்காக நாட்டை தீ மூட்டுவதை உடன் நிறுத்த வேண்டும். இனவாதமே மகிந்தவின் சகல தேர்தல் போராட்டங் களிலும் கோஷமாக அமைந்தது.

ஜனவரி எட்டாம் திகதி மக்கள் இந்தக் கோஷத்தையே நிராகரித்தனர். தேர்தலுக்கு இன்னும் சில நாட்கள் இருக்கும் போது நாட்டு மக்கள் நன்கு விழிப்பதற்கான போராட்ட கோஷத்தை கண்டிப்பிக்க இடமுண்டு.

இவ்வாறு பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்து உள்ளார். (செ-12)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா ரங்கநாதன்
## (கோட்டக் கல்விப் பணிப்பாளர் நெடுங்கேணி)

தண்ணீரூற்று கணுக்கேணி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ரங்கநாதன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர் நெடுங்கேணி) 05.08.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வமணியின் (ஆசிரியை இ.த.க பாடசாலை தண்ணீரூற்று) அன்புக் கணவரும், அனுருத்தா (யாழ் பல்கலைக்கழக கலைப்பீட 1-ம் வருடம் மாணவி), சயனுகா (முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி உயர்தர மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, நாளை (07-08-2015) 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தணுக்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ந.கருணாகரன் (சகோதரன்)
அதிபர், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் (1414)

## விநாயகமூர்த்தி
## விக்கினேஸ்வரமூர்த்தி

குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வி.விக்கினேஸ்வரமூர்த்தி 2015.08.05 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி – சுந்தரம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் – செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தி, ஞான மூர்த்தி, தமயந்தி, சுந்தரமூர்த்தி, விசாகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகா, ஹேமா, சண்முகராணம், அனுராதா, டெசியகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்ற தெய்வேந்திரமூர்த்தி, இராஜேஸ் வரியம்மா, பரஞ்சோதிமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.08.06) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காடாகடம்பை உருத்திரபூமியில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

(1415) தகவல்: மனைவி, பிள்ளைகள், சகோதரர்

## செபஸ்ரியன் அன்ரன் நைனஸ் ஜெயக்குமாரன்

யாழ்ப்பாணம் மாட்டீன் லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் அன்ரன் நைனஸ் ஜெயக்குமாரன் (ஜெயர்) 05.08.2015 அன்று காலமானார்.

அன்னார் செபஸ்ரியன் – காலஞ்சென்ற றீற்றா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜோசவ் ஜொரட், பற்றிக் டெஸ்மன் மற்றும் பெனடிக்ரா பிறேமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராணி, லலிதா ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2015) அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.27, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 8195 (1416)

## சுதந்திரக்...

வது தொடர்பான கடிதத்தை ஜனாதிபதியிடம் தாங்கள் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச் 22ஆம்திகதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அமைச் சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் பதவியேற்றிருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஐ.நாவின்...

டியமரும் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கியது தவிர, வடக்கில் ஐ.நாவினால் வேறு பிரதான திட்டங்கள் ஏதும் முன்னெ டுக்கப்படவில்லை.

வழக்கமான நடைமுறைகளின படி புனர்வாழ்வு அமைச்சின் ஊடாகவே அது மேற்கொள்ளப்படுகிறது.

அவர்களால் மாகாணசபைகளுடன் நேரடியாக தொடர்பு வைக்க முடியாது என் றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## கொழும்பில்...

மேலும் சந்தேகநபர்கள் பயணித்த முச்சக்கர வண்டியை குறித்த இடத்திலேயே விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கொலையுடன் தொடர்பு டைய சந்தேகநபர்கள் அடையாளம் காண பட்டுள்ளனரோடு, அவர்களைக் கைது செய் வதற்கான விசாரணைகளை கொட்டாஞ் சேனை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (செ-11)

## இரத்தினபுரி...

கம் தற்போது இரத்தினபுரி சிவ ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

முற்காலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு கார ணமாக இந்த லிங்கம் மண்ணுக்குள் புதைந் திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட் டுள்ளது.

இந்த சிவலிங்கத்துக்கு அப்பால் ஒரு மாணிக்கல்லும் இருந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (செ-11)

## கடத்தப்பட்ட...

கடந்த அரசாங்கத்தின் போது வெள்ளை வானிகளில் கடத்தி செல்லப்பட்ட நபர்களை கொலை செய்து, குறித்த சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கிய கொலைக் கும்பல், சடலங்களை கடலில் மூழ்கடிக்கச் செய்ததற்கான தகவல்கள் தன்னிடம் உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியும் முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான பிரசாந்த ஜெயகொடி தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஒன்றின் போது அவர் இதனை வெளிப்படுத்தியுள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இக்கொலைகளுக்காக தமிழீழ விடு தலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகி அரசாங்கத்தில் இணைந்து கொண்ட ஆயுதக் குழுக்களையும் கடந்த அரசாங்கத் தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் அரசியல்வாதியாகவும், பாதுகாப்பு செயலாளராகவும் செயற்பட்ட கோத்தபாய ராஜபக்ஷ சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு தன்னிச்சையாக செயற் பட்டார்.

அவர்களின் குற்றங்கள் மற்றும் சட்ட விரோத செயல்களை நியாயப்படுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரான தனக்கு வலியுறுத்தியதாகவும் அதனை நிராகரித்த மைக்காக தன்னை மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும்,

கிழக்கு ஆயுதக் கும்பல்களை பயன் படுத்தி தன்னை கொலை செய்ய திட்ட மிட்டதனால் தான் நாட்டை விட்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தினுள் மனிதர்கள் வாழ் வதா? இல்லையா? எவ்வளவு காலம் வாழ் வது? என்பதனை குறித்து தீர்மானித்ததும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவாகும்.

வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப் பட்டவர்களின் விதியும் இதுவாகும். குறித்த குழு நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கியது. அதற்கு தொடர்புடையவர்க ளும் இராணுவத்தில் இருந்த நபர்களாகும்.

அந்தக் காலத்தில் கொல்லன்னாவை நகர முதல்வரை கடத்திச் சென்றதும் இந் நபர்களே. மக்கள் அக்குழுவை பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த போதி லும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க குற்றவாளிகளை விடுதலை செய்தார்.

இக்குற்றங்களுக்கு தொடர்புடைய நபர் கள் இதுவரையிலும் சேவையில் ஈடுபட் டுள்ளனர்.

அவர்களுக்கு எதிர்வரும் அரசாங்கத் தின் கீழாவது தண்டனை வழங்க வேண் டும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியும் முன னாள் பொலிஸ் ஊடக பேச்சாளருமான பிரிய ந்த ஜெயகொடி தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பாகிஸ்தான் தலைவர் அக்ரம் மீது துப்பாக்கிச் சூடு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் சென்ற கார் மீது நேற்று மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தான் நாட்டின் சிறந்த இடது கை வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான அக்ரம் (49), தற்போது இளம் வீரர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார்.

## அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்



அந்த வகையில், நேற்றுதனது வீட்டில் இருந்து தேசிய அரங்குக்கு இளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கான பயிற்சி முகாமுக்குச் சென்றார்.

வாகன நெரிசல் அதிகம் உள்ள கராசா பகுதியில் சென்ற போது, அவரது கார் மீது மற்றொரு கார் திடீரென மோதியுள்ளது.

அதிர்ச்சியடைந்த அக்ரம் தனது காரை நிறுத்தியுள்ளார். அப்போது அந்த காரில் இருந்து வந்த மர்ம நபர் அக்ரம் கார் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

ஆனால், அந்த ரவைகள் அக்ரம் மீது படவில்லை. இதனால் அவர் அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பினார்.

இதுபற்றி அக்ரம் அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். பின்னர் அரங்குக்குப் புறப்பட்டுச் சென்றார். தன் மீதான தாக்குதல் குறித்து அக்ரம் கூறுகையில்,

என் கார் மீது துப்பாக்கியால் சுட்டது நிச்சயம் ஒரு அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும்.

அவரதுகார்பதிவெண்ணை குறித்து பொலிஸாரிடம் கொடுத்துள்ளேன். விசாரணை நடந்து வருகிறது. இந்த அதிர்ச்சியில் இருந்து நான் இன்னும் மீளவில்லை என்றார். (க)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.